திராவிடநாடு

மலர் 13 | 18—7—54 | இதழ் 3

தேவதையின் துயரம்

[வீரன்]

ஓங்காரீ! ரீங்காரீ! பயங்கரீ! சங்கரீ!
உண்மையுமானவள் நீயே!
பாங்காக என் பூஜை
தனை ஏற்று வந்திடுவாய்,
பரிபூரணானந்தவல்லீ!
தேன் பாகுடன் நல்ல ,
தெள்ளமுது படைத்தேன்,
தேவியே! சரணமம்மா!
வீண் தாமதம் வேண்டாம்,
வேண்டினேன் வந்தருள்வாய்,
வீரகுணவல்லி, தாயே!

உடுக்கையும் சிலம்பும் உருக்கமான பாடலொலியும், கேட்டு, 'பக்தர்கள்' கூடினர், ஊர்க்கோடியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் உலகம்மை சன்னதியில்.

நீண்ட நாட்களாக இப்படி ஒரு பூஜை செய்யப்படாததால், சோர்வடைந்திருந்த பூஜாரி, அன்று தன் திறமை அவ்வளவும் காட்டி, ஊர் மக்களையும், பூஜையைக் காண வெளியூர்களிலிருந்து வரும் மக்களையும் பரவசப் படுத்த வேண்டும் என்று தீர்மானித்து, பூஜைக்கு நாலைந்து நாட்களுக்கு முன்பிருந்தே, பாடல்களை நினைவிற்குக் கொண்டு வருவதும், சிலம்பு போட்டுப் பார்த்துக் கொள்வதும், ஆனந்தக் கூத்தாடிப் பார்ப்பதுமாக இருந்து வந்தான்.

உலகம்மை கோயிலுக்கு விசேஷமான அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஊர்மக்களில், வேண்டுதல் செய்து கொண்டவர்கள், விதவிதமான படையலிட்டுப் பூஜை செய்தனர். பெண்கள் கூட்டம் ஏராளம். பேச்சியம்மாள் அங்கு வந்ததும், உடுக்கை அடிக்கும் பூஜாரி கூட ஒரு விநாடி, தன் வேலையை நிறுத்திக் கொண்டு, அந்த அம்மையைப் பார்த்தான். மற்றப் பெண்களெல்லாம், பேச்சியம்மாளை வியப்புடன் பார்த்தனர். தெரிந்தவர்கள், பேசினர்—தெரியாதவர்கள் கூட, பேச்சியின் பக்கம் சென்று பார்வையிட்டனர். பேச்சியம்மை வந்ததும் பூஜையைக் கூட மறந்து விட்டனர்—உலகம்மையைக் கூடத்தான்! பேச்சியம்மாள், தன் வீரதீரத்தால், கணவன் உயிரையே காப்பாற்றி, பெரும் புகழ் பெற்ற மாதரசி. எப்படித்தான் தைரியம் வந்ததோ! என்று பலர் வியந்தனர். எல்லாம் அவளுடைய மாங்கல்ய பலம் என்று சிலர் கூறினர். அரிவாள், நல்ல கூர்! ஒரு வெட்டிலே தலையையே கீழே சாய்த்துவிடக் கூடியதாம்! என்று விளக்கமளித்தனர் வேறு சிலர்.

"பேச்சி! நடந்த கதையைத்தான் கொஞ்சம் விளங்கச் சொல்லேன்"—என்று கேட்டாள் முத்தம்மை. முனியம்மாவிடம் நேற்றே விவரமாகச் சொன்னேனே, எத்தனை முறைதான் சொல்லுவது, எனக்கு வாய்கூட வலிக்குது போ!" என்று பேச்சி கூறினால், விடுகிறார்களா, வற்புறுத்திப் பேசவைக்கிறார்கள்.

பேச்சியம்மாளை, விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணரசி, அருகில் வந்து, அமர்ந்துகொண்டு, பேச்சி "யாரம்மா நீ! இந்த ஊரல்ல!" என்று கேட்டாள். "ஆமாம்மா! வெளி ஊர்!" என்று விசாரத்துடன் கூறினாள், புதியவள். "இங்கே யார் வீட்டுக்கு வந்திருக்கிறே?" என்று கேட்டாள், பேச்சி.

"உலகம்மா பூஜையைப் பார்க்கத் தான்" என்று கூறிவிட்டு, "உன் கதையையும் கேட்டுவிட்டுப்போகத் தான் வந்தேன்"என்று தொடர்ந்து பேசி, பேச்சியம்மாளைப் பேசத் தூண்டினாள். பூஜை நடக்கட்டும், வெளியே, குளத்தங்கரைப் பக்கமாகச் சென்று பேசுவோம், வா, என்று கூறி, பேச்சியம்மாள் புதிய மாதரசியை அழைத்துச் சென்றாள்.

யாரோ பெரிய இடத்துப் பொம்பளை போலிருக்கு. மேனி அழகும் நடையுடையும் சொகுசாக வாழ்கிறவளென்று காட்டுகிறது. கொடுத்து வைத்தவள். வரகரிசியைக் கொதிக்க வைத்துக் குடித்துவிட்டு, வயல் வேலை பார்க்கிற நம்மைப்போல இருந்தால், உடலிலே இந்த மினு

மினுப்பும் பளபளப்பும் எப்படி இருக்கும். பெரிய இடத்து அம்மா! பெரியபண்ணைக் குடும்பமாக இருக்கும்—என்று பேச்சி எண்ணிக்கொண்டு, மரியாதையாக நடந்துகொண்டாள்.

“உம் பேரு என்னம்மா?” என்று பேச்சி கேட்க, “பரமேஸ்வரி! கன்னி என்றும் சொல்வார்கள்!” என்று புதியவள் விசாரத்துடன் பதில் சொன்னாள்.

“பிரமாதமான காரியம் ஒன்றும் செய்துவிடவில்லையம்மா—கன்னிம்மாதானே உம் பேரு—கன்னிம்மா! எங்க வீட்டுக்காரரும் நானும், பங்காளி வீட்டுக்குப் போயிருந்தோம், ஒரு விசேஷத்துக்காக. திரும்பி வருகிறபோது, எவனோ ஒரு படுபாவி—பேரு என்னமோ சண்முகமாம், மோப்பம் பிடிச்சுகிட்டு, எங்களைத் தொடர்ந்து இருக்கறான்போலிருக்கு, எங்களுக்குத் தெரியாது. எங்களவர் மடியிலே கொஞ்சம் பணம் இருந்தது. அதைத்தான் அந்தப் படுபாவிப் பய, மோப்பம் பிடிச்சுட்டான். ஊர்க்கதை பேசிகிட்டே நாங்க வந்தோம்—“யாருடா அது! டேய்! நில்லு! ஓடினே, தலையைச் சீவிடுவேன்னு, ” கூச்சலிட்டுக்கொண்டு ஓடிவந்தான் அந்த ஆளு. “பேச்சி! வந்தது ஆபத்து” என்று சொல்லிக்கிட்டே, வந்த ஆளை மடக்கிப் பிடிக்க வழி என்னான்னு எங்களவர் யோசிச்சார். படுபாவிப் பய, தடியாலே, ஓங்கி, அவர் மண்டையிலே போட்டான்—ஐயயோ! பேச்சின்னு கூவினாரு, எம் புருஷன். என் குலையே நடுநடுங்கிப் போச்சி. இரத்தம் குபுகுபுன்னு கிளம்பிடிச்சி. படுபாவிப் பய, அவர் மடியிலிருக்கிற பணத்தைப் பறிக்கறான். பார்த்தேன். சே! இனி நம்ம உயிரு என்ன வெல்லமான்னு தோணிச்சி, அவன் பெரிய சூரப்புலியாத்தான் இருக்கட்டும், நம்ம உயிர்போகிறதுக்குமுன்னே அவனை ஒழிக்க நம்மாலானதைச் செய்தாகணும்னு தோணிச்சி. இப்ப, நிதானமாச் சொல்றேண்டிம்மா, அப்ப, படபடன்னு மனசு அடிச்சுக்குது, ஐயோ! அடபாவி! கொலைபாதகா! அப்படி இப்படின்னுதான், கூச்சலிட்டேன். என் எதிரிலேயே, என் புருஷன் மண்டையைப் பிளந்தா, எனக்கு, எப்மாம் ஆவேசம் வரும். பத்ரகாளிபோல ஆயிட்டேன். ஒரு கூச்சல் போட்டேன் பாரு, கன்னியம்மா, இப்ப நினைச்சுப் பார்த்தா எனக்குப் பயமாத்தான் இருக்கு. எடுத்தேன் அரிவாளை, போட்டேன் அந்தப் படுபாவி கழுத்தைப் பார்த்து, அடிபாவின்னு அலறினான், கழுத்து கீழே அறுந்துவிழவில்லை, ஆனா, ஆசாமி கீழே விழுந்தான்—வெட்டு சாதாரணமானதா—வீராவேசமானவளா இருந்தனே, அப்போ! கெடுவான் கேடு நினைப்பான்! ஒரு பொம்பளைதானே என்று எண்ணிக்கிட்டான், ஏமாளி. ஆனால், கன்னியம்மா! எப்படித்தான் எனக்கு அந்தத் துணிச்சல் வந்ததோ தெரியலே, போ! படுபாவிப் பய மகன், ஆஸ்பத்திரியிலே படுத்துக்கிட்டுக் கிடக்கறானும். எம் புருஷன், என்னைக் கட்டித் தழுவிக்கிட்டு, கண்ணேங்கறாரு, கண்ணாட்டிங்கறாரு, சிங்கக்குட்டிடீ எங்கிறாரு, ஒரே சந்தோஷம். எனக்கு ஆனந்தம்—என் தாலி தப்பிச்சின்னு. ஊரே திரண்டுவந்து உபசாரம் பேசுது! பேச்சியுடைய தைரியத்தைப் பாருங்கடி, பொம்பளைன்னு இருந்தா அப்படி இருக்கவேணும்—புருஷன் உயிரைக் காப்பாத்தின புண்யவதி அவ, அப்படி இப்படின்னு எல்லோரும் புகழறாங்க. எனக்கு ஒரே வெட்கம். ஆனா, நான்மட்டும், அந்த விநாடி, அரிவாளைத் தூக்கி ஒரு வெட்டுப் போடாமெ இருந்தா, எம் புருஷனைக் கொன்னுபோட்டிருப்பான், அந்தப் படுபாவி. உலகாத்தா புண்யத்தாலே, எனக்குத் தைரியம் வந்தது, என் மஞ்சள் குங்குமம் நிலைச்சுது — இது தாண்டிம்மா, என் கதை—என்று பேச்சியம்மாள் கூறி முடித்தாள்.

“உனக்குப்பயமே தோணலியா, பேச்சி”

“தோணுமே இருக்குமா—ஆனா என்ன செய்றது—ஆபத்தான சமயம்—பயந்தா ஆகுமா?”

“பயந்து பயந்துதான், நான் பாழாப் போனேன்”

“உனக்கும் எதாச்சும் ஆபத்தா? கன்னிம்மா! ஏன் கண்ணைத்துடைக்கிறே? என்ன நடந்தது, சொல்லேன்”

“சொல்ல வெட்கமாஇருக்குது பேச்சி! உன்னோட தைரியத்திலே ஆயிரத்திலே ஒரு பங்கு இருந்தாக் கூட போதும். எனக்கு இல்லை, அந்தத் தைரியம். படுபாவிப்பய,...”

“யாரு? என்ன செய்தான்?”

“என் வீட்டிலே புகுந்து பெட்டியை உடைத்து, பொருளைஎல்லாம் களவாடிகிட்டுப் போயிட்டான். என் தலைக்கு பொன்னாலே செய்த முடி, உண்டு, அதை எடுத்துகிட்டான். ரொக்கம், நகை நட்டு, எல்லாம் போச்சி”

“வீட்டிலே யார் இருந்தது?”

“நான் மட்டும்தான்”

“திருட்டுப் பய வந்தது உனக்குத் தெரியலையா? ஏன் கூச்சல் போட்டு ஊரையே, எழுப்பி விட்டிருக்கலாமே”

“கூச்சல் போடக்கூடாது பேச்சி! கூச்சல் போடக் கூடாது!”

“ஏன்! கூச்சல் போட்டா படுபாவிப் பய, கொன்று போட்டுடுவான்னு பயமா?”

“பைத்யக்காரப் பொண்ணுடி நீ! பேச்சியம்மா! நான் யாருன்னு தெரியாததாலே இப்படிப் பேசறே. ஊரிலே களவு, கொலை, அடிதடி, சண்டை இதெல்லாம் நேரிடாதபடி தடுக்க போலீசு இருக்கேல்லோ, அந்தப் போலீசு தலைவரையே ஒரு காவாலிப்பய அடிச்சா, அவர் கூச்சல்போட்டு, ஊராரை உதவிக்குக் கூப்பிட்டா, அவரோட கௌரவம் என்ன ஆகும்? அதுபோல, என் நிலை. உனக்குப் புரியாது. நான்தான் அந்த ஊருக்கே முதன்மை. யாருக்கு என்ன கஷ்டம் வந்தாலும் ஆபத்து வந்தாலும், என்னிடம் தான் வந்து சொல்லுவாங்க. என்னோட தயவு இருந்தா போதும்; சகலமும் கிடைக்கும்னு நம்பி வாழறாங்க. உங்க ஊரிலே உலகாத்தா இல்லையா, எவ்வளவு பூஜை நடக்குது, எவ்வளவு செல்வாக்கு, அது போலன்னு வைத்துக்கொள்ளேன். நான், அந்த ஊருக்கு உலகாத்தா!”

“நீ, பேசறது விசித்திரமா இருக்குடிம்மா! ஆமாம் கள்ளன் வந்தபோது நீ தூங்கிவிட்டாயா?”

"இல்லையே! ஊர் உலகம் தூங்கிக் கொண்டு இருக்கறபோது, விழித்துக்கொண்டிருந்து மக்களைக் காப்பாற்றுகிற நான், தூங்க முடியுமா?"

"விழித்துக்கொண்டிருக்கச்சேயா, திருடு நடந்தது—அங்கே, கல்லு கட்டை ஏதாவும் கிடைக்கலையா — தூக்கி வீசினு திருட்டுப்பய, ஓடிடுவானே"

"சூலம்கூட இருந்தது"

"சூலமா! எடுத்து அவன் மார்பிலே குத்தலாமே"

"குத்தலாம்! ஆனா நான் என்ன, பேச்சியம்மாளா?"

"எந்த அம்மாவா இருந்தா என்ன? நம்ம பொருளைக் களவாடறான்—நம்ம வீடு — விழிச்சுக்கிட்டும் இருக்கறே—சூலமும் இருக்குது என்கிறே — ஏன் சும்மா இருந்தே? அது என்னடிம்மா, அப்டிப்பட்ட பயம்"

"பயத்தை எல்லாம் போக்கும் பரமேஸ்வரின்னு, என்னை ஊரார் புகழ்வார்கள்!"

"இது, அதைவிட வேடிக்கையா இருக்கு. உள்ளே நுழைஞ்சி பொருளைக் களவாடறவனைப் பிடிக்க முடியாமல், நீ, பயந்துகொண்டு இருக்கறே, உன்னைப் புகழுறாங்களாம்! வேடிக்கையான ஊருதான்! என்ன பேரு, அந்த ஊருக்கு?"

"ஆத்தூரு — இந்தஊர்ப் பேர் என்ன?"

"பத்மநாப மங்கலம்னு இந்த ஊருக்குப் பேரு. ஊர்பேரு கிடக்கட்டும், நீ ஏன் கல்லாட்டமா இருந்துவிட்டே, அதைச் சொல்லு"

"கல்லாத்தான் இருக்கறேன்"

"நல்லாத்தான் இருக்கு உன் கதையோட வேடிக்கை—அப்புறம் என்னதான் நடந்தது"

"போலீசார், துப்புவிசாரித்துக் கொண்டு இருக்கறாங்க"

"என்னோட தைரியத்தைப் போலீசாரு ரொம்பப் புகழ்ந்து பேசினாங்க"

"போலீசாருமட்டுமா! நானே உன்னோட தைரியத்தைப் பார்த்து புகழத்தான் வேண்டியிருக்கு. பேச்சியம்மா! உன்போன்ற வீரப் பெண்மணிகளைத்தான் மக்கள் பாராட்ட வேணும், புகழவேணும், உன்போன்ற பெண்மணிகளோட கதையைத்தான் ஊரார் தெரிந்து வைத்துக் கொள்ளவேணும். அதை விட்டு விட்டு, களவாடியவனைக் கூடப்பிடிக்க முடியாத என்போன்றவர்களை, கொண்டாடுவதும், பூஜை போட்டுப் புகழ்பாடுவதும், காணிக்கை செலுத்துவதும், கற்பூரம் கொளுத்தி வைச்சி, தாயே! தயாபரி! பரமேஸ்வரி! சகலலோக நாயகி! இப்படின்னு அர்ச்சனை செய்யறதும், உப்புக்கும் உதவப் போறதில்லை."

"நீ பேசறது, எனக்கு ஒண்ணும் புரியலையே — உனக்குப் பூஜை போடறாங்களா"—

"ஆமாம்—எனக்குத்தான்"

"இது என்ன பைத்யக்காரத்தனம்!"

"ரொம்பகாலமாக இருந்து வருகிற பைத்யக்காரத்தனம். பேச்சியம்மா! உன்புருஷனோட உயிரைக் காப்பாத்தற வீரதீரம் உன்னிடம் இருந்தது—எனக்கோ, ஒரு கள்ளனைப் பிடிக்கும் தைரியம் இல்லை. ஆனா, நான் யார் தெரியுமா......"

"யாரு......?"

"பேச்சி! நான் தான், கன்னிகா பரமேஸ்வரி என்கிற தெய்வம்"

"என்னது—தெய்வமா?"

"ஆமாம்! தெய்வமேதான்!"

இந்த உரையாடல் முடிந்ததும், பேச்சியம்மாளிடம் பேசிக் கொண்டிருந்த மாதரசி மாயமாக மறைந்து விட்டாள்.

*

"என்னடா வீரா! உன் புளுகு மூட்டையை, என்னிடமே காட்ட, ஆரம்பித்து விட்டாயே" என்று கேட்டேன்.

"இல்லை, பரதா! இது முழுவதும் பொய் அல்ல!" என்றான் வீரன்.

"அப்படியானால், கன்னிகாபரமேஸ்வரி எனும் தேவதை பேச்சியம்மாளிடம் பேசி, தன் வேதனையையும் வெட்கத்தையும் எடுத்துக் கூறினாள் என்பதை நானும் நாடும் நம்ப வேண்டும்! என்ன, அப்படித்தானே!" என்று நான் கேட்டேன்.

"எனக்கென்ன, ஜடாமுடி இருக்கிறதா, திருநீறாவது உண்டா, நான் புளுகு சொல்லி, நம்பச்சொன்னால், நீயும் இந்த நாடும் நம்புவதற்கு! பரதா! இது கற்பனைதான்—ஆனால் உண்மையும் கலந்தது" என்றான் வீரன்.

"என்ன உண்மை, நீ சொல்லும் அபத்தத்திலே புகுந்து கொண்டிருக்கிறது?" என்று நான் குத்தலாகக் கேட்டேன், அவனோ, நம்பிக்கையுடன், என்னிடம் ஒரு தினத்தாள் தந்தான்—கோடிட்ட செய்திகளைக் காட்டினான். நான்கண்ட செய்திகள் இவை,

(முதல் செய்தி)

பத்மநாபமங்கலம், சேந்திலான் பண்ணைச் சேரியைச் சேர்ந்த முண்டக்குடும்பனும், அவரது மனைவி பேச்சியம்மாளும், பொட்டாலூரணி கிராமத்திலுள்ள ஒரு உறவினரைப் பார்த்துவிட்டு 7ம் தேதியன்று தம் ஊருக்குத்திரும்பிக் கொண்டிருந்தனர் வரும் வழியில், சண்முகவேளாளர் என்பவர், திடீரென்று தோன்றி, முண்டக்குடும்பனை அடித்து, அவர் மடியிலிருந்த பணத்தை அபகரிக்க முயன்றதாகவும், அப்போது பேச்சியம்மாள் தன்கையிலிருந்த அரிவாளால் சண்முகவேளாளர் பிடரியில் அடித்து அவரைக்கீழே வீழ்த்தியதாகவும் தெரிகிறது. சண்முக வேளாளர் ஆஸ்பத்திரியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

(இரண்டாம் செய்தி)

ஆத்தூர் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி அம்மன் கோயிலின் மூலஸ்தான கதவுச் சங்கிலிகளை வெட்டியும்பூட்டுகளை உடைத்தும் சில திருடர்கள் உள்ளே புகுந்து அம்மனின் கிரீடத்தை களவாடிச் சென்றதாகத் தெரிய வருகிறது மேற்படி திருடர்கள் அடுத்த அறையின் பூட்டையும் கள்ளச்சாவி போட்டுத் திறந்து சில நகைகளையும் ரொக்கத்தையும் களவாடிக் கோயிலின் பின்புறமாக ஓடிவிட்டதாகவும் தெரிகிறது.

(தினமணி—13-7-54)

இதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்! எப்படி வீரன் தந்த இந்த உண்மை தழுவிய கற்பனையை உங்களிடம் தராமலிருக்க முடியும் எனவேதான் தந்திருக்கிறேன்.

*

முதல் முழக்கம்

தேங்காயைப் பறிக்க துறட்டுக் கோல் போதாது; மரம் ஏறவேண்டும் மாங்காயைப் பறிக்கத் துறட்டுக் கோல் போதும். முல்லை மலரைக் குனிந்து பறிக்கலாம். கனி பறிப்பதில் பல முறைகளைக் கையாள்வதுபோலவே, இலட்சியங்களைச் சாதிக்கவும் பல வழிகள் இருக்கின்றன. எதற்கெடுத்தாலும், போர்! போர்! என்று கூவிவிட்டு, அதன் விளைவுகளை எண்ணிப் பாராமல், பிறர் தலையில் பழி சுமத்துவோர், ஏராளமிருக்கிறார்கள், நாட்டில்.''

*

''கல்லை எடுத்து வீசுவோம்! வீழ்ந்தால் கனி விழட்டும்; இல்லையென்றால் யார் தலையிலாவது கல் விழட்டும்—என்று வேலியோரத்தில் நின்றபடி வீசிவிட்டு ஓடும் சிறுபிள்ளை விளையாட்டில், தி. மு. க. ஈடுபடாது. எதையெதை எப்படி யெப்படிச் சாதிக்க வேண்டும் என்பதை, நாங்கள் அறிவோம்.''

*

''ஐதராபாத்தையும் சேர்த்து விசால ஆந்திரம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டிய ஆந்திர அரசினர் தமிழகத்துக்குச் சொந்தமான பகுதிகளில் பிடிவாதம் காட்டுவது சரியல்ல. அவர்கள், அமைக்க விரும்பும் விசால ஆந்திரத்துக்கு — விரும்பினால் — நாமும் ஒத்துழைக்கத் தயார்! ஆனால் நம்முடைய பகுதிகளை நம்மிடம் ஒப்படைக்க அவர்கள் முன்வரவேண்டும்; அதுதான் விவேகம்''.

*

''சித்தூர் பிரச்னையைக் காட்டி தெலுங்கர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஆத்திரத்தையும் வெறியையும், சிலர், உண்டுபண்ணியிருப்பதாக அறிந்தேன். அதன் காரணமாக, இந்த வட்டாரத்தில் ஆத்திரமும் ஆவேசமும் ஏற்பட்டு, நம்மவர்கள் கஷ்டப்படுவதாகவும், தோழர்கள் சொன்னார்கள். வருவதும், இப்படித் தூண்டிவிட்டுச் செல்வதும், அந்தச் சிலருக்குச் சாதாரணமான விஷயமாக இருக்கலாம்: ஆனால், நமக்கு அப்படியல்ல. நாளையதினம் நாமும் ஆந்திரரும் ஒன்றாக வாழவேண்டியவர்கள், எனவே, ஆத்திரத்தை இங்கே காட்டிப்பிரயோசனமில்லை! அங்கே உட்கார்ந்தபடி ஆட்டிப் படைக்கும் டில்லியின்மீது காட்டவேண்டும்!!''

*

தித்திக்கும் தமிழ் பேசி, வாழும் சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகள் ஆந்திர அரசுடன் இணைக்கப்பட்டிருப்பது குறித்து, ஆவேசம் கொண்டோராக அலறும் சிலர், இங்கேயிருக்கிறார்கள்! அவர்கள், எடுத்த காரியத்தை முடித்துவிட்டு பிறகு வீர முழக்கமிட்டால் மறத்தமிழன் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் — ஆனால், பிரச்னையைத் தொட்டுவிட்டு, உடனே தொடைதட்டிக்கொண்டு நம்மை நோக்கிப் பாய்கிறார்கள்!! நம்மைத் தாக்கவும், நமது மக்களுக்கும் ஆந்திரருக்குமிடையே கலகத்தை உண்டுபண்ணவும், ஏதேதோ செய்து வருகிறார்கள். வடகோடியில், சித்தூர்! தெற்கே நாஞ்சில் நாடு!! இந்த இரண்டு எல்லைப்பிரச்னைகளையும், எரிச்சல் பிரச்னைகளாக ஆக்கி, அதன் மூலம் அரசியல் உலகில் உலவ, விரும்புகிறார்கள். இந்த இரண்டு இடங்களிலும் உள்ள பகுதிகள் நமக்குச் சொந்தமானவை!! தமிழகத்தோடு சேரவேண்டியவை!! இவைகளைப் பெற்றுத்தர வேண்டிய பொறுப்பு, டில்லியின் கையிலிருக்கிறது. இந்த டில்லியை வற்புறுத்த வேண்டிய அதிகாரம், மாநில அரசிடமிருக்கிறது. மாநில அரசு, இந்தப் பிரச்னையில் முயற்சியெடுக்கும்படி செய்யவேண்டும்—எல்லை மாற்றம் செய்யும் அதிகாரத்தை டில்லி வைத்துக்கொண்டிருக்கும்போது, அந்த டில்லியிலிருப்பவர்கள் தங்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தோழர்கள், அதனைமிரட்டி—அதட்டி—கெஞ்சி, காரியத்தைச் சாதிக்காமல், பக்கத்திலிருக்கும் மக்களுடன் மோதுவதும், எல்லையில் வாழும் தமிழரும் பிறரும் குடுமிபிடிச் சண்டைக்கு ஆளாகும்படி செய்வதும், பிரச்னையைத் தீராத சிக்கலாக்குமே யொழிய வேறில்லை!

இந்த உண்மையினை அறிந்த காரணத்தினாலேயே, நாம் சமயமும் சந்தர்ப்பமும் நோக்கி இருக்கிறோம். எல்லைத்தகராறு பற்றி முழக்கமிடுவோர், நம்மை அழைக்கத் தவறுவதில்லை! நாமும், அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும்—என்கிற ஆர்வத்தால் அல்ல, நம்மை அழைப்பது!! நமக்கும் ஆந்திர மக்களுக்குமிடையே எரிச்சலை உண்டுபண்ணவேண்டும், குரோதத்தைக் கிளப்பிவிடவேண்டும் எனும் குறுமதியே காரணமாகும். எனினும் கடந்த ஆண்டு எல்லை உரிமையை நிலைநாட்டுவதற்காக, கட்சிசார்பற்ற முறையில் திருத்தணியில் அறப்போர் நடைபெற்றபோது, நாம் கலந்து கொண்டோம்-நமது தோழர்கள் பலர், அடக்குமுறைக்கு ஆளானார்கள். நாம் சேர்ந்ததும், அறப்போர் டில்லியின் மீது பாயத்துவங்கியது! நமது தோழர்கள் டில்லி ஆதிக்கத்தின் வசமிருக்கும் ரயில்வே நிலையங்களில் தமது கண்ணோட்டத்தைத் திருப்பினார்கள்!! அது கண்டதும், எல்லைப் போரை எழுப்பியோர் வாபஸ் ஆகி 'சென்னை' க்கு வந்துவிட்டார்கள். சென்னையிலிருந்தபடி 'காமராஜரே! உம்முடன் அறப்போர்!'' என்று கூவுவதும், அவர் அதட்டினால், ''உம்முடன் அல்ல; டில்லியிடம்!'' என்று அலறுவதும், டில்லி உறுமினால், உறவுக்கு இமயம் உரிமைக்கு வேங்கடமன்றோ, எமது முழக்கம், எங்கள் போராட்டம், உங்களிடமல்ல; பிரகாசத்திடம்!! என்பதுமாக, இஷ்டம்போல் வளைந்து கொண்டுள்ளனர். இந்தப்போக்கால் எல்லைப் பிரச்சனை தீராதது மட்டுமல்ல—சித்தூரின் பகுதியிலே, தீப்பொறிகள் பல எழும்பவும் காரணமாயிருக்கின்றன. புத்தூர் போன்ற இடங்களிலே, இந்தச் சிலர், பேசிவிட்டு வந்த வார்த்தைகளால்

(13-ம் பக்கம் பார்க்க)

[சிறுகதை]

புயல் நிவாரண நன்கொடை

[புகழேந்தி]

நீண்டு வளர்ந்த அந்த ஆலமரத்தின் மறுபக்கத்தில் புதியதாகத் தயாரிக்கப்பட்டிருந்த 'குடிசை' அமைதியாகக் கிடந்தது. அடிக்கடி அங்கிருந்து வந்துகொண்டிருந்த 'ஐயோ' 'அம்மா' என்ற முனகல் ஒலி உள்ளேப்படுத்திருந்த வள்ளியை நினைவூட்டியது பொன்னனுக்கு. அவசரமாக வெளியிலிருந்து வந்த பொன்னன் கிடுகை விலக்கிக் கொண்டு குடிசைக்குள் பார்த்தான். அந்த வலி பொறுக்க மாட்டாமல் கதறுகிற வேளையிலும்கூட பொன்னனைக் கண்டதும் வள்ளியின் முகம் மகிழ்ச்சியால் விரிந்தது.

'என்ன வள்ளிசெய்யுது?' என்று விசாரித்தான் அவளை.

'ஒண்ணுமில்லே அத்தான்! நீங்க ஓடிப்போயி பக்கத்துத் தோட்டத்து கிழவியைக் கூட்டிகிட்டுவந்துடுங்க...' என்றாள் வள்ளி.

அவள் சொன்னஉடனேயே துண்டைத் தலையில் கட்டிக் கொண்டு பக்கத்துத் தோட்டத்தை நோக்கி ஓடினான் பொன்னன்.

பொன்னன் அழைத்ததுமே வள்ளியைப் பார்க்க ஓடோடி வந்தாள் கிழவி. அவள்தான் அந்தப்பக்கத்து குடிசைகளுக்கெல்லாம் பிள்ளை பேறுக்கு உதவும் 'டாக்டர்'

உள்ளே நுழைந்த கிழவி அரை மணி நேரத்திற்குப் பிறகு அவசரமாக வெளியே வந்தாள்.

'என்ன பாட்டி...?' என்று ஆவலோடு அவளை விசாரித்தான் பொன்னன்.

'ஒண்ணுமில்லேப்பா...முதல் பிரசவம் பாரு. அது கொஞ்சம் கஷ்டப்படுது. நீ அவசரமா ஓடிப் போயி நம்ம ஆஸ்பத்திரி 'டாக்டரை'க் கூப்பிட்டுகிட்டு ஓடிவா...' என்றாள் கிழவி.

'டாக்டர் என்ற உடனேயே அவனது மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது. வள்ளி நல்லபடியாக இருக்கவேண்டுமே என்றகவலை வேறு அவனைப் பிடித்துக் கொண்டது. தரையில் கால் பாவாமல் அரை மைல் தூரத்தை ஐந்தே நிடத்தில் கடந்து ஆஸ்பத்திரியை அடைந்தான் பொன்னன். அங்கே டாக்டர் ஏதோ அவசர அலுவலாகக் காரில் ஏறிக் கொண்டிருந்தார். அவரது பக்கத்தில் போய் நின்றபொன்னன் 'சாமி...என் பெஞ்சாதிக்கு அவசரமாயிருக்குதுங்க. பிரசவக் கேசு... அவசரமாவந்துட்டுப்போயிடுங்க...' என்றான் கும்பிட்டபடி. 'ஓ பொன்னனு...?!எவ்வளவு பணம்வச்சிருக்க...' என்று அவனைக் கேட்டார் டாக்டர்.

'ஏழைகிட்ட ஏதுங்க பணம் ஏதோ எங்க பண்ணைகிட்ட வாங்கித் தாரேன். அவசரம் உடனே வந்துட்டுப்போயிடுங்க...' என்றான் பொன்னன்.

'ஓ... நான் இப்பவந்து மருந்து குடுக்கணும். அப்புறம் வந்து நீங்க பணம்கொடுப்பீங்கஅப்படித்தானே ...இதோபாரு பொன்னு இப்போ பணம் கையிலே இருந்தா கொடு. இதோ வர்ரேன். இல்லேண்ணு நான் வரமுடியாது? எனக்கு அவசரம். 'அர்ஜண்டா' பக்கத்து ஊர்பண்ணையாரைப் போய்ப் பார்க்கணும். அவருக்கு 'அஜீரண' முண்ணு ஆள் வந்திருக்கு...' என்றார் அவர்.

பொன்னன் எதுவும் கூறமுடியாமல் திகைத்து நின்றான்.

'டிரைவர்...நீ காரை எடப்பா' என்றார் டாக்டர்.

'சாமி...சாமி' என்று கூக்குரலிட்டான் பொன்னன்.

'பணத்தோடுவா ஒருமணி நேரத்தில் வந்துடறேன்...' என்ற டாக்டரின் குரல் மோட்டார்காரின் 'ஹார்ன்' சப்தத்தோடு இணைந்து வந்தது.கார்போனபாதையில்தெரிந்த புழுதி மண்டலத்தையே பார்த்துக் கொண்டிருந்த பொன்னன் பெரிய பண்ணை பெரியசாமி அய்யரின் வீட்டை நோக்கி நடந்தான்.

விரைவாக அய்யரின் வீட்டை நோக்கி நடந்த பொன்னன் ஒருமுறை தன்னைச் சுற்றியுள்ள காட்சியை நோக்கினான். இரண்டு வாரங்களுக்கு முன் தமிழகத்தின் கடற்கரைப் பகுதியில் அடித்த புயலின் காரணமாகப்பாதிக்கப்பட்ட அந்தத் தோட்டங்கள் பொன்னனின் உள்ளம்போல ஒளி இழந்து கிடந்தன. புயலின் நினைவு வந்த உடன் அந்தப் புயலோடு போன அவனது குடிசையும் அந்தக் குடிசையோடு போன—வள்ளியின் பிரசவத்திற்கென அவன் சேர்த்துவைத்திருந்த—பணமும் அவனது நினைவுக்கு வந்தன.

அவனது குடிசையும் பணமும் புயலோடுபோன இரண்டாம் நாள் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்க்கார் பண உதவி புரிவதாகக் கேள்விப்பட்டு கிராமச் சாவடிக்கு ஓடினான் பொன்னன். அங்குபோய் வந்திருந்த அதிகாரியிடம் தனது நஷ்டம் பூராவற்றையும் வெளியிட்டான். எல்லாவற்றையும் குறித்துக் கொண்டார் அதிகாரி. எல்லாவற்றையும் அவர் குறித்துக்கொண்டதும் அவர் தரப்போகிற உதவித் தொகையை எண்ணி மனதிற்குள்ளேயே கணக்குப் போட்டான் பொன்னன். அந்த உதவித் தொகையைக் கொண்டு குடிசையை முதலில் புதுப்பிப்பதா அல்லது வள்ளியின் பிரசவத்திற்கு அதைவைத்துக் கொள்வதா என்ற எண்ணம் கூட வந்தது அவனுக்கு. அவனுடைய திட்டத்தையெல்லாம் அரை நொடியில் குலைத்துவிட்டார் அதிகாரி.

'நீ யார் வீட்டில் வேலை செய்கிறாய்?' என்று பொன்னனைக் கேட்டார் அவர்.

'பெரிய பண்ணை பெரியசாமி அய்யர் கிட்ட' என்றான் பொன்னன்.

'அவருகிட்ட வேலைசெய்றவங்களுக்கு அவரே குடிசைபோட்டுக் குடுப்பாரு. அதனால் உனக்கு அரசாங்க உதவி கிடையாது' என்றார் அதிகாரி புத்தகத்தைத் திருப்பியபடி.

அவருடைய இந்தப் பதில் அவனது எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது. காலில் விழாக் குறையாக அதிகாரியை எவ்வளவோ வேண்டிப்பார்த்தான் பொன்னன். ஆனால் அதிகாரி மறுத்துவிட்டதோடு மட்டுமல்ல பொன்னனை விரட்ட 'பியூனி'ன் துணையைவேறு நாடவாரம்பித்துவிட்டார். எனவே வேறு வழியின்றி

பெரிய பண்ணையைப் போய்ப்பார்த்தான் பொன்னன்.

தலையைச் சொரிந்துகொண்டு நின்றிருந்த பொன்னனை 'என்னடா விஷயம்?' என்று கேட்டார் அய்யர்.

'ஒண்ணுமில்லே சாமி. குடிசை கட்டப் பணம் தாராங்க சர்க்காரிலேண்ணு சொன்னாங்க. போய்க் கேட்டேன். நீங்களே கட்டித் தாரீங்கண்ணு சொல்லிட்டாங்க... அதோட வள்ளிக்கும் இதுதான் மாசம். பிரசவத்திற்கு அவசரமா ஏதாவது தேவையிருக்கும். மிச்சம் பிடித்து வச்சிருந்த பணமும் குடிசையோடு போயிட்டுது. அதனால் தாங்க வந்தேன்...' என்றான் பொன்னன்.

'எல்லாம் அடுத்த வாரம் தாண்டா போ' என்று பொன்னனை அனுப்பிவைத்துவிட்டார் அய்யர்.

அடுத்தவாரம் போய்க் கேட்டான் பொன்னன்.

'என்னடா கடன் கொடுத்தவன் மாதிரி சொன்ன நாளில் கணக்கா வந்து நிற்கிறே' என்று சீறினார் அய்யர்.

'அவசரமுங்க...... இல்லேண்ணா வருவேனா?' என்றான் பொன்னன்.

'அங்கே கிடக்கிற கிடுகை எடுத்து சும்மா சாதாரண குடிசை ஒண்ணு இப்போதைக்குக் கட்டிக்கோ. அடுத்த மாதம் நல்ல குடிசை கட்டிக்குவோம். பணம் அந்த நேரத்தில் வந்துகேள். அவசியம் தர்ரேன்' என்று 'அபயம்' அளித்தார் அய்யர்.

இந்தப் பழைய நினைவுகளில் ஆழ்ந்துவிட்ட பொன்னன் பெரிய பண்ணை வீட்டுக்கு நடந்துவந்து விட்டதை உணர்ந்தான்.

அய்யரின் வீடு கலகலப்பாகஇருந்தது. போவோரும் வருவோருமாகக் கூட்டம் ஏராளமாகக் கூடியிருந்தது. காரணம் புரியாத பொன்னன் அய்யரின் கடைசி மகன் வேணுவை 'சேதி என்னாங்க?' என்று விசாரித்தான்.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் மந்திரி வரப்போறார். அவருக்கு நம்ம வீட்டில் வரவேற்பு. வரவேற்புக்குப் பின்னால் அப்பாவும் மந்திரியும புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடப்போகிறார்கள்......' என்றான் வேணு.

'அப்பாவை இப்போ பார்க்கலாமா?' என்று கேட்டான் பொன்னன்.

'ஓ பார்க்கலாமே........ஹாலில் இருக்கிறார்' என்றான் வேணு

அய்யரின் பார்வையில் நின்றாலாவது 'என்ன?' என்று கேட்க மாட்டாரா அவர் என்ற எண்ணத்தில் 'ஹாலு'க்கு நேர ஒதுங்கி நின்றான் பொன்னன்.

பொன்னன் அங்கு வந்த உடனேயே பார்த்துவிட்டார் அய்யர். பார்த்ததும் 'பொன்னா இவ்வளவு நேரமும் எங்கே போயிருந்தாய்?' என்று விசாரித்தார் அவர். மந்திரி வரப் போகிறார் என்பதாலோ என்னவோ அய்யரின் முகத்தில் கருணை ததும்பி வடிந்தது.

'பொன்னா பூக்கடையில் நாலு ரோஜாப்பூமாலை கட்டி வச்சிருப்பாங்க. உடனே போய் வாங்கிட்டு வந்திடு ஓடி ஓடு அவசரம் என்று பொன்னனை கடை வீதிக்கு அனுப்பி வைத்தார் அவர்.

பொன்னனுக்கு நேரம் போய்க் கொண்டேயிருப்பது மிகவும் வருத்தத்தை அளித்தது. மாலை வாங்கி வந்ததும் உடனே பணத்தைக் கொடுத்து விடுவார் அய்யர் என்ற எண்ணத்தில் அவசரமாகப் பூக்கடையை நோக்கி ஓடிய பொன்னன் சீக்கிரமாகவே மாலையுடன் திரும்பிவந்தான். மாலையை அவர் கையில் கொடுத்துக் கொண்டே 'வீட்டில்......' என்று இழுத்தான் பொன்னன். அவன் கூறுவதை நின்று கேட்க முடியவில்லை அய்யரால். அதற்குள் ஒரு தொண்டர் ஓடிவந்து 'மந்திரி வந்து விட்டார்' என்று அவசரப் படுத்தினர். உடனேயே மந்திரியை வரவேற்க வெளியே ஓடினார் அய்யர்.

ஒருவழியாக வரவேற்பு வைபவம் சிறப்புற நடந்து முடிந்தது. அய்யர் வீட்டு பெரிய ஹாலில் தங்கியிருந்தார் மந்திரி. அவரை 'நகரப்பிரமுகர்'கள் பலர் சந்தித்து உரையாடியவண்ணமாயிருந்தனர். இதற்கு மத்தியில் அய்யரைக்கண்டு விஷயத்தை வெளியிட முடியவில்லை பொன்னனால். 'என்ன செய்வது' என்று அவன் திகைத்து நின்ற நேரத்தில் திடீரென அய்யர் அவனது முன்வந்து நின்றார்.

'பொன்னா......நானும் மந்திரியும் காரில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்கப்போகிறோம். அதனால் நீ உடனே வண்டிகட்டிட்டுப்போய் மெயில் வண்டியில் வரும் சிவராமனை அழைச்சுட்டு வந்துடு' என்ற அவனுக்கு வேலைகொடுத்தார் அவர். இதைச் சொன்னதும் உள்ளே மந்திரி கூப்பிடுவதாகத் தகவல் வந்தது அய்யருக்கு. மந்திரியிடம் எதையோ கூறிவிட்டு வெளியே வந்த அய்யர் அதுவரை வண்டியில் மாட்டைப் பூட்டாமல் நின்று கொண்டிருந்த பொன்னனைக் கண்டார். தன் கட்டளையை அவன் அலட்சியப் படுத்துகிறான் என்ற ஆத்திரம் வந்துவிட்டது அவருக்கு.

'நான் சொல்லி கால்மணி நேரமாவுது. ஏண்டா அப்படியே நிற்கிறாய்?' என்று அதட்டினார் பொன்னனை.

'வள்ளி இடுப்பு வலி' தாளமாட்டாமல் துடிக்கிறாங்க. டாக்டர் கிட்டப்போனேன். பணம் கொண்டு வாண்ணு சொல்லிட்டாரு அவரு. ரொம்ப அவசரங்க. அதான் நிற்கிறேன்...' என்றான் பொன்னன்.

'மெயில் வர ஒரு மணிநேரம் தாண்டா இருக்குது. அதுக்குள்ளே செத்தாடா போயிடுவா வள்ளி' என்று 'பொழிந்து' விழுந்தார் அய்யர்.

வேறு வழியின்றி வண்டியை அவசரமாக 'ரயில்வே ஸ்டேஷ'னுக்கு ஓட்டினான் பொன்னன். அய்யர் தராவிட்டாலும் மெயிலில் வரும் அய்யர் மகன சிவராமனிடமாவது பணம் வாங்கலாம் என்ற எண்ணம் வேறு அவனை அவசரப் படுத்தியது.

மெயில்வந்தது. ஆனால் மெயிலில் வரவேண்டிய சிவராமன வரவில்லை. நம்பிக்கையற்ற நிலையில் வண்டியைத் திரும்பவும் அய்யரின் வீட்டுக்கு ஓட்டிப்போனான் பொன்னன்.

வண்டியை அவிழ்த்து மாட்டை தொழுவில் கட்டிவிட்டு அய்யரைப் பார்க்க ஹாலுக்கு ஓடினான் பொன்னன்.

'அண்ணா வரலையா?' என்று கேட்டுக்கொண்டே அங்கே திரும்பவும் வந்தான் வேணு.

'வரலீங்க......அய்யா எங்கே?' என்று விசாரித்தான் பொன்னன்.

'அப்பா இப்பதான் வெளியே போரார்: பஞ்சாயத்து போர்டு ஆபீஸூக்கு. அங்கே மந்திரிக்கு வரவேற்புப் பத்திரம் வாசிச்சுக்கொடுப்பார்கள். அது முடிந்ததும் அப்படியே போய் விடுவார்கள்...' என்றான் வேணு.

'அப்பா பணம் ஏதாவது தந்தாங்களா?' என்று அரைகுறை நம்பிக்கையில் விசாரித்தான் பொன்னன்.

'இல்லையே...' என்று கூறிவிட்டு வெளியே போனான் வேணு.

வள்ளியின் உருவம் பொன்னனை வாட்டியது அவனையறியாமலே கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. என்ன செய்வதென்றே புரியாமல் ஹாலை நோக்கிய அவனது கண்கள் ஹாலின் மத்தியில் கிடந்த மேஜையின்மேலிருந்த 'மணிபர்சை'க் கண்டதும் ஆச்சரியத்தால் விரிந்தன.

திரும்பவும் திரும்பவும் வள்ளியின் நினைவு வந்தது அவனுக்கு. 'பர்சை'எடுத்துக்கொண்டாலென்ன யார் பார்க்கப்போகிறார்கள்? என்ற எண்ணம் புதிதாக முளைத்தது.

பர்சிலே, பத்தோ இருபதோ நிச்சயம் இருக்கும்—ஐயர் பர்சிலே நூறு ரூபாய் நோட்டுகள்கூட இருக்கும். டாக்டருக்குத் தேவையான பணம் தரலாம்...ஆனால் திருட வேண்டுமே...தெரிந்துவிட்டால்...! பொன்னன் மனக்கண்ணிலே, நெல் திருடியவர்களைப் புளிய மரத்தில் கட்டிவைத்து அடித்த காட்சிகள் தெரிந்தன. பிடிபட்ட திருடர்களை அவனே மிலாரால் அடித்திருக்கிறான் ஐயர் கட்டளைப்படி. அப்போது அடிபட்டவன் அலறிய சத்தம், அவன் காதில் கேட்டது. அச்சம் பிடித்தாட்டிற்று.

"ஹ ஹா—ஐய்யய்யோ ரொம்ப வலிக்குதுபாட்டி...உயிர் துடிக்குது..." என்று வள்ளி கதறும் சத்தமும் கேட்கிறது—ஏழை என்ன செய்வான், மனப்போர்!

மடப் பயமவன்! மடப் பயமவன்!—என்று கூறிக் கொண்டே சமயல்கார ஐயர் வந்தார். பொன்னனைக் கண்டார். ஏண்டா இங்கே நிக்கறே என்று அதட்டினார். பொன்னன் திருடனாகவில்லை—ஐயர் காப்பாற்றினார்.

வெளியே சென்றான், வேதனை அவனைத்தாக்கிற்று.

ஐயர் தருவாரா......ஒரு பத்து ரூபாயாவது......! என்று ஓர் ஆசை பிறந்தது. சமயல் ஐயரிடம் சம்பளப்பணத்துடன் சீட்டாட்டப் பணமும் உண்டு என்பது பொன்னனுக்குத் தெரியும்.

"சாமீ! ரொம்பப் புண்யமா இருக்கும்......உயிர் வேதனைங்க வள்ளிக்கு...ஒரு இருவது ரூபா......" என்று கெஞ்சினான் பொன்னன்.

"ஐயர் ஏதோ மகிழ்ச்சியுடன் இருந்தார். சீட்டாட்டத்திலே நல்ல இலாபம் இருக்கும்" என்று பொன்னன் எண்ணிக் கொண்டான்.

"ஏண்டா பயலே! இருபது ரூபாயா...இருவது..." என்றுகேலி பேசினார் சமயல் ஐயர்.

"செலவு இருக்குதுங்க... முதல் பிரசவம்..." என்றான் பொன்னன்.

"ஒரு பத்து தாரேன்...அடுத்த வாரம் தந்துவிடனும்"

"மந்திரி வந்துபோனதும் எஜமானிடம் வாங்கிக் கொடுத்து விடறேஞ்சாமி"

"எஜமான், நோட்டு நோட்டாத் தான் நீட்டிடப் போறார். போடா மடப்பயமவனே! இந்தா..." என்று கூறினார்—பத்து ரூபாய் நோட்டும் கொடுத்தார்.

தங்கமானவரு—தயாள குணம். என்று மனதாரப புகழ்ந்து கொண்டான் பொன்னன்.

பொன்னன் மாடிவீட்டை விட்டு மகிழ்ச்சியுடன் கிளம்பினான்—எதிரே வந்தார் எஜமானர்.

"பொன்னு! உள்ளே மேஜை மேலே, பர்சு வைத்து விட்டேன்—எடுத்துண்டுவாடா..." என்றார்.

பர்சா, சாமி!—என்று கேட்டான் பொன்னன்—உள்ளே ஓடினான், பர்சு இல்லை......திடுக்கிட்டுப் போனான்.

காணமுங்களே...என்று இழுத்தார்ப் போல் பேசினான் பொன்னன்......காண...என்று கேட்டபடி உள்ளே ஓடினார் ஐயர், பர்சு இல்லை, அங்கு இங்கும் தேடினார்... உள்ளே யாரடா வந்தது என்றார்... பொன்னன் நடுநடுங்கி நின்றான்... மடியில் பத்து ரூபாய் நோட்டு!

தோலை உரித்து விடுவேன்...... என்று கர்ஜித்தார் ஐயர்.

தோலை உரித்தே இருக்கிறார் பொன்னனுக்குத் தெரியும்.

"எனக்குத் தெரியாது சாமீ, சத்யமா..."

"என்னடா பசப்பறே........" பேச்சும் அறையும் சேர்ந்து விழுந்தது—மடியிலிருந்த நோட்டும் கீழே விழுந்தது.

"சமயல் ஐயர், சாமீ, சமயல் ஐயரு......" என்று ஆரம்பித்தான் பொன்னன், "இப்ராஹீம்......இப்ராஹீம்...ஏ! கான்ஸ்டபிள்!" என்று ஐயர் கர்ஜித்தார்......மந்திரிக்குக் காவலாக வந்த கான்ஸ்டபிள் உள்ளே வந்தான். பொன்னனைக் காட்டினார். பொன்னன் கைது செய்யப்பட்டான். அன்று இரவு, சமயல் ஐயர், ஐம்பது ரூபாய் சீட்டாட்டதில் தோற்று விட்டு, "தர்மி காசு, அது விளங்காதுன்னு நேக்குத் தெரியும்" என்று விசாரத்துடன் கூறிவிட்டு, பர்சை ஒரு பாழுங்கிணற்றிலே வீசி எறிந்து விட்டார்.

*

மறுநாள் தினப் பத்திரிகையில் அய்யரின் புகைப்படத்தோடு 'புயல் நிவாரண நன்கொடை' பிரபல காங்கிரஸ் தலைவரும் மிராசுதாருமான பெரியபண்ணை பெரியசாமி அய்யர், கனம் மந்திரி அவர்களுடன் புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு அன்று இரவு புயல் நிவாரண நிதிக்காக இருபதினாயிரம் ரூபாய் நன்கொடையாக அளித்தார். கனம் மந்திரி அவரது தாராளத் தன்மைக்காக அவரைப் பெரிதும் புகழ்ந்தார்" என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்தது. அதே பத்திரிகையின் ஒரு ஓரத்தில் 'பிரசவிக்கமுடியாமல் ஒரு பெண் மரணம். அவளது கணவன் அன்று திருடியதாகக் கைது செய்யப்பட்டானாம்' என்ற செய்தியும் வெளி வந்திருந்தது. 'பார்டர்' இல்லாததனாலோ என்னவோ அந்தச் செய்தி, அய்யரின் நன்கொடை கவர்ந்த அளவுக்கு பலரின் மனதைக் கவரவில்லை.

திராவிடநாடு

காஞ்சி] 18—7—54 [ஞாயிறு

அவரது வருத்தம்!

காங்கிரஸ்காரர்களுக்குள்ளே ஒற்றுமைக் குறைவும், உற்சாகமின்மையும், நாளுக்கு நாள் பெருகி வருகிறது எனும் உண்மையை காங்கிரசின் தலைவரும், இந்நாட்டின் அதிபருமான பண்டித நேரு அடிக்கடி கூறிவருகிறார். பொதுக் கூட்டங்களில் மட்டுமின்றி காங்கிரஸ் ஊழியர்கள் பெரும்பாலோராகக் கூடுமிடங்களிலும் இந்தக்குறையை அவர் அவ்வப்போது வெளியிட்டு வந்திருக்கிறார். அண்மையில் அலகாபாத்திலுள்ள ஆனந்த பவனில் கூடிய காங்கிரஸ் ஊழியர் கூட்டத்திலும் இந்த உண்மையை உரைத்திருக்கிறார். நாடு எந்தப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதைக்கூட காங்கிரஸ்காரர்கள் கவனிப்பதில்லை, என்றும் வருத்தப்பட்டிருக்கிறார்.

அந்த அளவுக்கு காங்கிரஸ் ஊழியர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டு விட்டது, என்று வருத்தப்படும் பண்டித நேரு, தாம் நாட்டை உற்றுப் பார்க்கும்போது, அது புது வாழ்வு பெற்று, உற்சாகத்தோடு முன்னேறுவது தெரிவதாகவும், அந்தக் காட்சியை மற்ற காங்கிரஸ் ஊழியர்களும் காணவேண்டும் என்றும் விரும்புகிறார்—வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறார். ஆனால் அந்தக் காட்சி காங்கிரஸ் ஊழியர்கள் கண்களுக்குத் தென்படவில்லை.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் சிலர், வெளி நாடுகளுக்குத் தூதுவர்களாகச்சென்றிருப்பதும், வெளி நாடுகளிலிருப்பவர்கள் இங்கு தூதுவர்களாக அனுப்பப்பட்டு இந்நாட்டு ராஷ்ட்ரபதியுடன் விருந்துண்டு கை குலுக்குவதும், காந்தியடிகளின் சமாதிக்கு மலரிட்டு அஞ்சலி செய்வதுமான இரண்டொரு உற்சாகமான முன்னேற்றங்களைத் தவிர, வேறு எதனையும், காங்கிரஸ் ஊழியர்கள் மட்டுமல்ல, இந்நாட்டிலுள்ள யாருமே காணவில்லை. ஆனால் நேரு பண்டிதரின் கண்களுக்கு மட்டும், நாடு உற்சாகமாக முன்னேறுவது தெரிகிறதாம் பண்டிதருக்குத்தெரியும் இந்த அற்புதக்காட்சி ஏன் மற்றவர்களுக்குத் தெரியவில்லை என்று யாராவது கேட்டால், அவர்களா? காங்கிரஸ் விரோதிகள், விதண்டாவாதிகள், என்று கூறி எளிதாகத் தப்பித்துக்கொள்ளமுடியும். ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கே அந்தக் காட்சி தெரியவில்லையென்ற உண்மையை பண்டிதரே ஒப்புக்கொண்டு இனியாவது அந்தக் காட்சியைக் காணுங்கள். அதோ தெரிகிறது—நான் பார்க்கிறேன், என்று கூறி இருக்கிறார் என்றால் அது மிக, மிக பரிதாபத்துக்குரிய ஒன்றேயாகும்.

நேரு பண்டிதர் இப்படிக் கூறுவதிலிருந்து நாடு புதுவாழ்வு பெற வேண்டும்—உற்சாகமான முன்னேற்றத்தையடைய வேண்டும் என்பதிலேயே நமது தலைவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்று மற்றவர்கள் எண்ணிக் கொள்ளவேண்டும் என்பதைத் தவிர, உண்மையாகவே அவருக்கோ, அவரது கட்சிக்கோ அந்த எண்ணம் இல்லையென்பதைத்தானே அவ்வப்போது ஆங்காங்கு கூட்டப்படும் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டங்கள் தெரிவித்து வருகின்றன. சுதந்திரம் பெற்ற பின்பு கூட்டப்பட்ட எந்த காங்கிரஸ் ஊழியர் கூட்டத்திலும், நேரு பண்டிதர் பேசுகிறார் என்று ஏற்பட்டால், அவருடைய பேச்சு நாம் மேலே குறிப்பிட்டது போலவே இருந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? காங்கிரஸ்ஊழியர்கள் எதற்காக—எந்த நோக்கத்துக்காகப் பயிற்சி அளிக்கப்பட்டார்களோ, அது தீர்ந்துவிட்டது. அப்படிப்பட்டவர்களிடம் வேறு புதுப் பிரச்னைகளைப் பற்றிப்பேசி இவற்றையெல்லாம் நீங்கள்தான் செய்தாக வேண்டும், அதற்குரிய திறமையும் உற்சாகமும், ஒற்றுமையும் உங்களிடம் உண்டாகவேண்டும் என்று எதிர்பார்த்தால் அது எப்படி சாத்தியமாகும்? நாட்டை மீட்டவர்களே நாட்டை ஆளவேண்டும் என்று விரும்புவதின் விளைவுதான், அலகாபாத் காங்கிரஸ்ஊழியர்கள் கூட்டத்திலும் பிற இடங்களிலும் இவ்வாறு பேசும்படி செய்துவிடுகிறது.

இவ்வாறு பேசிய நேரு பண்டிதர் இன்னொரு உண்மையையும் கூறியிருக்கிறார். நாட்டை ஆளும் கட்சி நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமானால், அதற்குப் பலம் பொருந்திய ஒரு எதிர்க்கட்சி இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டு, அப்படியொரு எதிர்க்கட்சி இல்லையே என்ற வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார். இந்த வருத்தம் வரவேற்கக் கூடியதே. பொதுவாக எல்லா நாடுகளிலும், எதிர்க் கட்சிக்கு நல்ல மதிப்புக் கொடுத்து அது கூறும் யோசனைகளை ஏற்று நடப்பதுதான் நாட்டுக்கு நல்லது என்ற முறையில் காரியங்கள் ஆற்றப்படுகின்றன. ஆனால் இங்கு நிலைமை அப்படி இல்லை. எதிர்க்கட்சிகளே இருக்கக் கூடாது என்பதைத்தான் ஆஸ்திவாரமாகக் கொண்டு ஆட்சி நடத்தப்படுகிறது. எதிர்க்கட்சிகள் தலைதூக்கினால் எங்கே தாங்கள் கவிழ்ந்துவிடுவார்களோ என்ற அச்சம், ஆளும் கட்சியினரை இங்கு அதிகமாக ஆட்டிப் படைப்பதால எதிர்க்கட்சிகளின் வளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பதுமில்லை — அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்புத் தருவதுமில்லை. ஆனால் பலம் பொருந்திய எதிர்க்கட்சி இல்லையே என்ற வருத்தத்தை மட்டும் வாயளவில் தெரிவித்து வருகிறார். அதுவும் இப்போது சிலகாலமாகத்தான் இந்த 'நல்லபுத்தி' இவருக்கு உண்டாகியிருக்கிறது. இது தெளிவு பெற்று இந்நாட்டின் எதிர்க்கட்சிகளுக்கு நல்ல மதிப்புத் தந்து, அவைகூறும் யோசனைகளையும் ஏற்று நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்ற நல்ல புத்தி ஏற்பட்டுவிட்டால், நாடு விரைவில் முன்னேற்ற மடைந்துவிடுவதோடு, ஆளும் கட்சிக்கு ஆதரவும் அதிகமாகும். இதனை நினைவில் வைத்து — சுயநலத்தை மறந்து—துவேஷத்தைக் களைந்து — குரோதத்தை நீக்கி ஆளும் கட்சி ஆட்சி புரிய வேண்டும். இந்தச் சிறந்த பண்பு ஏற்படாத வரை, நாட்டில் உற்சாகமோ முன்னேற்றமோ ஏற்படாது.

❁

தேம்புகின்றேன்!

[தெய்வ நெறியைத் தமிழகத்தில் பரப்பும் மெய்ஞ்ஞானி என்று நம்பி, ஓர் கபட வேடதாரியிடம் சீடனாகிக் காவி அணிந்து பணியாற்றிய இளைஞன், உண்மை கண்டு உள்ளம் வெதும்பி, காவி களைந்துவிட்டு, இல்லறம் புகுந்து நல்லறம் கற்றிடும் மாணவனான காதை—கவிதை அல்ல—புலவர் துணைகொண்டு கவிதையாக்கிக் கொள்க]

கற்றதனா லாயபயன் என்கொல்
வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்
என்றே வள்ளுவரும் இயம்பினார்
என் உள்ளம் நன்றிதுவே என்றே கண்டதனால்
நான் இனி நாடிடுவேன் நல்லாசான் என்றே
நாற்புறமும் கண்ணோட்டம் செலுத்தி நின்றேன்.

இருபதினைந்தும் ஓர்ஐந்தும் கொண்டபிரான்
ஈர்க்கும் பேச்சழகன் இளவல் கண்டேன்
காவியுடைக் கவினளிக்கக் காட்சிதரும் அடியாராய்
மலைமடத்தின் அதிபனானேன்
மாதேவர்க் கடியனானேன்
மணிவாசகத் தமிழை மாநிலம் அறியச்செய்து
மாசுதனைப் போக்கி நல்ல தேசு உலவச் செய்வேன்
என்றே இசைத்திடும் கீதம் கேட்டு
என்உடையை மாற்றினேன், மடம் புகுந்தேன்.

இளவழகன் என்ற பெயர் இறை அருகில் ஆகாதென்று
மணிமொழியார் ஆனேன்காண் மடத்தடிமையு
மானேன்.
அடிகளார் உடன்செல்வேன்,
அவருரையைச் செவிமடுப்பேன்,
அவர்க்கான தொண்டறிந்து நான் செய்வேன்.
சிவப்பழமே! செந்தமிழே! சீலச் செல்வா!
என இறைஞ்சி இறைஞ்சிமிக இன்பம் பெற்றேன்.

சழக்கருரை தனைஒழித்து
சன்மார்க்கம் தனை அழைத்து
தமிழகத்துக் கணிசெய்வேன், தம்பி! என்றார்
தாள்பற்றி, வணங்கி நின்றேன்.

சிலகாலம் சென்றதுகாண் சிவநெறியில்
சிலர்இவர் வந்துற்றார், வெற்றி, என்று
திருப்புகழை அடியார்கள் பாடிநின்றார்,
தேனொழுகும் தீந்தமிழைப் பருகிநின்றேன்
தெளிவற்ற நிலை ஈதென்று அன்றறியேன்,
தேம்புகின்றேன்!

கட்டுவது காவிதான், கருத்தோ ஆதிக்கம் தாவும்
காணீர்
உருட்டுவதும் உருத்திராக்க மாலையேதான்
உருட்டுவிழிப் பாவையர்மேலே நாட்டம்
அருட்கடலே! என்றேத்தி வருவோர் பல்லோர்
அவர்தாமும் அடித்தாட்கொள்வார்
வெருட்டுவார், வெஞ்சினங்கொண்டு,
மருட்டுவார், மாடென்பார் மனிதர்தம்மை
இருட்டுவந்துற்றகாலை, இன்மொழி உண்டோ என்பார்!

கனிகள் பறித்திடவும் வகையும் கண்டார்
கதலித் தோட்டம் அதற்கான மாடம்!
காதிலே சேதி; கடுகளவும் ஒப்பவில்லை!
கன்பதைத்து குற்றத்தால் கண்டேன் ஐயோ!

ஐயன் அழைத்தார் என்று ஆள்சொன்னான்
பெய்யனைக் காண இப்போ மேவுமோ என்றுகேட்டு
பையப்பர் வந்துநின்றார், பழமடம் தன்னில் ஓர்நாள்.
அறிந்துரைத்திடவும் எண்ணி
அடிகளார் அறையை நாடி
அடைக்கலமானேன், சென்றேன்
ஐயகோ! கண்டகாட்சி!

அம்மவோ! சொல்லப்போமோ!
அருள்நெறி அளிக்கவந்த அண்ணலும்
பொருள் பறித்திடும் ஓர் புன்மொழிப் பாவைதானும்
விழிமொழி பேசி ஆங்கு
வியர்த்திடும் கோலம் கண்டேன்!

பதறினேன், பயந்தேன், நைந்தேன்.
அறம் இதுதானோ ஐயா!
அருள் தரும் முறை இதானோ!
சீலமோ! சிவநெறியோ!
சிற்றின்பக் கூடமோ, இம்மாடம் தானும்!
காடுடைய சுடலைப்பொடி கொண்டு
கண்ணிலே தூவிடுதல் கற்றீர் நன்று,
காரிருளில் எனைத்தள்ளி
காண்கின்றீரோ, பேரொளி ஈண்டு
என்றெல்லாம் கேட்க நெஞ்சம் எவிற்று,
எந்தன் நாவோ, குழறிற்று.

காஷாயம் கட்டியதும், இக்கட்டிலறை காண்பதற்கோ
என்தானோ இவ்வெளி வேஷம்
ஏற்புடைய செயல்தானோ
என்றே எண்ணி,
கோலமதை நான் களைந்தேன்
கொல்லு புலிக்காடு நீங்கி
வந்துற்றேன் கல்வி பயல் கூடம் நோக்கி,

காம்ரேட் கழுகாசலம்

காம்ரேட் கழுகாசலம், அன்று மாலை, எங்கள் ஊரிலே பிரசித்தி பெற்ற அனுமார் கோயில் எதிரே நின்றுகொண்டிருந்ததைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது; மந்திரிவேலைகிடைத்த மகிழ்ச்சியால் தாண்டவமாடியபடி, கடலைத் தாண்டிய வானர வீரனை சுவாமி ராமசாமியார் வணங்கினார் என்று படித்தபோது எனக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் காம்ரேட் அனுமார் கோயில் எதிரே இருக்கக் கண்டு நான் உள்ளபடியே ஆச்சரியப்பட்டுப்போனேன். ஒரு சமயம், காம்ரேட் ஏதாவது கூட்டம் அங்கு நடத்த, முன்னேற்பாடுசெய்யத் திட்டமிட்டு, களத்தைப் பார்த்திடும் பணியில் ஈடுபட்டிருக்கிறாரோ என்று எண்ணினேன் — ஒரு விநாடிதான் அந்த எண்ணம், உடனே அதுபோய்விட்டது. ஏனெனில் காம்ரேட் கழுகாசலம் சில காலமாகவே 'கூட்டு மேடை'யிலேதான் அதிக அக்கரை காட்டி வந்தார். தனிக் கூட்டம் போடுவதில்லை; மேலும் அனுமார்கோயில் திடல் மிகவும் பெரியது, அங்கு கூட்டம்போடுவது அழகாக இராது என்று அவரே தன் யூனிட் சார்பாக அறிக்கை அனுப்பி இருந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். காம்ரேட் ஏன் அங்கு நிற்கிறார் என்பது குறித்து இவ்வளவு சிரமப்பட்டுச் சிந்தித்துக்கொண்டிருப்பானேன்; அவரையே கேட்டுவிடுவோமே, என்று தீர்மானித்து, அருகே சென்று வணக்கம் தெரிவித்து "என்ன பிரதர்! இங்கு நிற்கிறீர்!!" என்று கேட்டேன். மகிழ்ச்சியற்ற முறையிலே, ஒரு புன்னகையைக் காட்டினார் — அதுவும் விரைவில் மறைந்துபோயிற்று. "ஒரு வேலையாக!" என்று சுருக்கமாகப் பதிலளித்தார். காம்ரேட், கோபத்திலிருக்கிறாரா, கவலையா, கலக்கமா, என்று கண்டறிய முடியவில்லை. "பிரதர்! இங்கு என்ன வேலை! இது அனுமார் கோயில்! வழக்காடி வருபவர், வயிற்றுவலிக்காரர், வாங்கின கடனை எப்படி ஏமாற்றுவது என்று சூதுத் திட்டம்போடுபவர், இப்படிப் பலபேர் இங்கு வருவார்கள், நமக்கு இங்கு என்னவேலை, வாரும் போவோம், ஊர்க்கோடித் திடலுக்கு, அங்கு மாணவர்களின் கால்பந்தாட்டமாம்!" என்று நான் அழைத்தேன். 'பிரதர்! பலபேர் இங்கு வருவார்கள் என்று சொன்னீரே, பலபேரல்ல, ஆயிரக்கணக்கிலே கூடுகிறார்கள். வியாழக்கிழமைகளில், வருடத்துக்கு ஒரு முறை பத்து நாள் திருவிழா நடக்கிறது. அப்போது பெருங்கூட்டம்—புள்ளிவிவரம் எடுத்தேன்—சராசரி ஒரு நாளைக்கு, நானூறு பேர் கூடும் இடம் இது, என்று கூறினார்.

மூன்று மூகாட்டிகள். கோயிலுக்குள்ளே நுழைந்து கொண்டிருந்தனர். காம்ரேட் கழுகாசலம், ஏன் அனுமார் கோயிலுக்குச் செல்பவர்களின் கணக்குப்பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. கேட்டேன். அவருக்கு ஆனந்தம் புரியாததில் ஆச்சரியம் இல்லை, பிரதர். ஆச்சரியமில்லை. வெகு ஜனத்தொடர்பிலே அக்கரை கொண்ட கட்சிக்குத்தான், இந்த விஷயம் புரியும். இடம் எதுவாகத்தான் இருக்கட்டும், அனுமார் கோயிலோ, ஆதிகேசவர் சன்னதியோ, அப்துல்காதர் டீ கடையோ ஆழ்வாரப்பன் சோற்றுக்கடையோ, இடம் எதுவாக இருந்தாலும், அங்கு மக்கள் எவ்வளவு பேர் கூடுகிறார்கள் என்பதுதான் முக்கியம் எங்களுக்கு. ஜனசக்தி எங்கெங்கு காணப்பட்டாலும் நாங்கள் அங்கு சென்றாகவேண்டும் — மக்களைக் கண்டு, மார்க்சீசத்துக்கு அவர்களை அழைத்துவர, ஒவ்வொரு சமயத்தையும் உபயோகப்படுத்த வேண்டும்—எங்கள் வேலை முறை அது—பூர்ஷுவாக் கட்சிகளுக்கு இது கிடையாது. மக்கள்! மக்கள்! எங்கு கூடினாலும்! எதன் பொருட்டுக்கூடினாலும்! அவர்களை அணுக வேண்டும்! இது இப்போது நாங்கள் தீட்டிக் கொண்டுள்ள புதுத்திட்டம் என்றார் கழுகாசலம். எனக்கு உண்மையிலேயே பரிதாபமாக இருந்தது! உலகு உய்யும் உத்தமமான ஓர் கொள்கை, பொது உடைமை, அதன் செல்வாக்கு, பேரரசுகளைச் சின்னாபின்னமாக்கி, எந்த அரசையும் ஓரளவுக்கேனும் தன்னைத் தானே திருத்திக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளுகிறது. இப்படிப்பட்ட அருமையான திட்டத்தை வைத்துக் கொண்டு, அனுமார் கோயிலுக்கும் போகிறவர்களைத் தேடித்திரிகிறாரே, பாவம். என்று வருத்தப்பட்டேன். "பிரதர்! அனுமார் கோயிலுக்கு வருகிறவர்கள், பழைமை விரும்பிகள்தானே, பாவம் புண்ணியம், முன்வினை, மறுபிறப்பு, ஜாதி குலம் ஆச்சாரம், முதலியவைகளிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் தானே — அவர்களிடம் மார்க்சின் தத்துவத்தையும், மானிடகுல மீட்சிக்கான திட்டத்தையும், பொருளாதார பேதத்தையும் அதை மூடிவிடும் முதலாளித்துவ முறையையும் விளக்கினால், என்ன பலன்! அவர்கள் அனுமானின் வாலழகையும், கண் உருட்டையும், வாய் சிவந்திருப்பதையும், கையிலே சஞ்சீவி பர்வதம் இருப்பதையும் தானே கண்டு சொக்கிக்கிடப்பார்கள்! என்றேன், "ஆமாம்! அதனால் என்ன?" என்று கழுகாசலம் கேட்டுவிட்டு, "பைத்யக்காரர்கள்! ஜனசக்தியை எங்கெங்கு காண்கிறோமோ, அங்கெல்லாம் சென்று, அவர்களுடைய பாஷையிலேயே பேசி, அவர்கள் உயர்வானது என்று கருதும் நம்பிக்கையை மதித்துப் பேசி, பிறகு அவர்களை நமது பக்கம் இழுக்க வேண்டும்"—என்றார். நான் திடுக்கிட்டுப்போனேன். "அனுமான் யார்? ராமதூதன்! ராமன் யார்?" என்று கேட்கலானார். நான் இப்படி ஒரு கேள்வி கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை. "ராமன்-ஆரிய அரச குமாரன்!" என்றேன். "பார்! பார்!! உன் இனவெறிப் பேச்சை ஆரம்பித்து விட்டாயே! ஆரியனாவது, திராவிடனாவது! ராமன், வெகு

ஜனோபகாரி — மக்கள் தலைவன் — ஏகாதிபத்யவைரி—சுயேச்சாதிகார விரோதி—இராவண அரசு எனும் ஏகாதிபத்யத்தை அழித்தொழித்து, மக்களாட்சியை ஏற்படுத்திய மாவீரன்—அந்த மாவீரனின் திருத்தூதன், ஸ்ரீமன் அனுமார்!—அவருடைய எண்ணமெல்லாம், நோக்கமெல்லாம், சிந்தனை எல்லாம், யாரிடம் இருந்தது? யாரிடம்? மக்களிடம்! சீமான்களிடமல்ல! கோடீஸ்வரர்களிடமல்ல! சாதாரணப்பிரஜைகளிடம்! படையிலே பணியாற்றிய பாட்டாளிகளிடம்! அதனால்தான், களத்திலே வானரசேனைகள் இறந்துபட்டபோது, சஞ்சீவிபர்வதத்தைத் தூக்கிக்கொண்டுவந்தார்—அனுமன் புகழ் வாழ்க! அனுமத்பிரபாவம், அபேதவாதம் பெற உதவும்!" என்றார். நான் என்ன செய்ய முடியும். கமுகாசலம், கோயிலுக்குள்ளே வேகமாக நுழைந்தார். அவசரத்தில் எதையோ கீழே போட்டுவிட்டார். எடுத்துப்பார்த்தேன். காம்ரேட் ஜீவாவின் கம்பராமாயணச் சொற்பொழிவு ஏடு! சரி! காம்ரேட் கமுகாசலம், அனுமனை நாடுவது புரிந்தது! பரிதாபம்! பரிதாபம்! ⊛

பொக்கிஷம் பாரீர்!

இதுவரை, இந்தியாவையோ, இந்திய மக்களையோ புரிந்து கொள்ளாதவர்களுக்கு, இப்பொழுது ஒரு புது வழியைக் கண்டு பிடித்துத் தந்திருக்கிறார்.

இவர் கண்டு பிடித்திருக்கும் புது வழியே குறிதவறாமல் சென்றால், இந்தியா எப்படிப் பட்டது — இந்தியாவில் வாழும் மக்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்துவிடுமாம்.

ஒரு சிலர் இருக்கலாம், இந்நாட்டைப் பற்றியும் இந்நாட்டு மக்களைப் பற்றியும் அரைகுறையாகத் தெரிந்திருப்பவர்கள்! அவர்களும் இப்புது வழியே சென்றால், முற்றிலும் தெரிந்த மூதறிஞராகிவிடுவராம்.

இப்புது வழியைப் பூரணமாகப் புரிந்து கொள்ளாதவர்கள். இந்தியாவையோ, இந்திய மக்களையோ பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாதாம். ஆம்! இந்தியாவையும் இந்திய மக்களைப்பற்றியும் அறிந்து கொள்ளும் சிறந்த சரித்திரச் சான்றுகள் அனைத்தும் பொதிந்துள்ள அரியதோர் பொக்கிஷமாம்!

இப்பொக்கிஷத்தைப் போற்றிப் புகழாதவர்கள் கிடையாதாம்! இப்பொக்கிஷத்தின் பெருமை கிஞ்சித்தேனும் குறையவில்லையாம்! இந்தியாவைப்பற்றி—இங்குள்ள நிலையைப் பற்றி—அகில உலகும் அறிந்து கொள்ளும்வாய்ப்பினை உண்டாக்கும் பொக்கிஷமாம்! அதன் பெருமை அளவிடற்கரியதாம்! இவ்வழி ஏகுவீர், இடர் களைந்து இன்பமுடன் வாழுவீர் என்ற நல்லதோர் அறிவுரையைத் தந்திருக்கிறார் பண்டித நேரு.

இப்படிப்பட்ட இணையிலா பொக்கிஷத்தைப் பெற்றிருப்பதாகப் பெருமை பேசுபவர்தான் — ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து, அத்திட்டங்களை நிறைவேற்ற அரும்பாடுபட்டு வருகிறார்! அத்திட்டங்களை நிறைவேற்ற பொருள் இல்லையே என முகாரி பாடுகிறார். பொக்கிஷத்தை வைத்துக் கொண்டும் புலம்புவானேன்? வெண்ணெய் இருக்கும் பொழுது நெய்க்கு தேடி அலைவானேன்? அழியாப் பொக்கிஷம் அருகில் இருக்கையில் — அப்பொக்கிஷத்தின் துணை கொண்டு அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாமே! குவலயம் போற்றும் வகையிலே குதூகலத்துடன் வாழலாமே! கூழுக்கு உப்பில்லையே எனக் கதியற்ற நிலையினைக் கணப்பொழுதில் போக்கலாமே! வாடி வதங்குவோரின் வாட்டத்தை விரட்டலாமே!—என்றெல்லாம் எவருக்கும் கேட்கத்தான் தோன்றும். என்ன செய்வது? குறைகளைப் போக்கிக் கொள்ள அப்பொக்கிஷம் உதவவில்லை!—வாட்டத்தைப் போக்க—வறுமையை ஒழிக்க அப்பொக்கிஷம் உதவவில்லை. நாட்டின் நிலையை உயர்த்த அது உதவவில்லை. என்றாலும், அப்பொக்கிஷத்தை அறிந்து கொள்ளுங்கள் — போற்றுங்கள் எனச்செப்புகிறார். வறுமையையும் வாட்டத்தையும்போக்க வேறு வழிகளைத் தேடுகிறார்—ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற அனைவரும் ஒத்துழையுங்கள் என அழைக்கிறார்.

சரித்திரங்களெல்லாம் மாறுபட்டும்கூட இப்பொக்கிஷம் சற்றேனும் மாறுபடவில்லையாம். உண்மைதான்! தென்னாட்டாராகிய நாம், கிரேக்கம், யவனம், சாவகம் முதலிய அன்னிய நாடுகளெல்லாம் நம்மைப் போற்றிப் புகழும் வகையிலே வாழ்ந்திருந்தோம். இமயத்தில் வெற்றிக்கொடி நாட்டினோம். அவைகளெல்லாம் மாறுபட்டுவிட்டன. நாம் இன்று மற்றவர்களிடம் கையேந்தி நிற்கிறோம். சரித்திரம் மாறுபட்டுத்தான் போயிற்று. சரித்திரம் மாறினாலும், அப்பொக்கிஷம் மாறுபடவில்லையாம். மாறுபடாத பொக்கிஷத்தைப் புரிந்துகொள்ளுங்கள்—புரிந்துகொள்ளாவிட்டால் இந்தியாவைப்பற்றி அறிந்துகொள்ளாதவர்களாவீர் என வரையறுத்துக் கூறுகிறார்.

இன்று எதை பொக்கிஷம் எனப் போற்றிப் புகழ்கிறாரோ, அந்தப் பொக்கிஷத்தைப்பற்றி, அன்று, தன் மகளுக்கு எழுதிய கடிதத்தில் எழுதும்பொழுது, 'அது ஆரியர் திராவிடர் போராட்டம்; தென்னாட்டவர்களை வானரர்களாக சித்தரிக்கும் ஒரு காரியம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பொழுது அவர் ஒரு சாதாரண பிரஜை; சிறையினுள்ளே இருந்து எழுதினார். அன்று, ஆரியர் திராவிடர் போராட்டமாகக் காட்சியளித்தது, இன்று — இந்தியாவின் முடிசூடா மன்னராக விளங்கும் இன்று— பொக்கிஷமாகக் காட்சியளிக்கிறது. எவ்வளவு பெரிய மாறுதல்! ஏன் இந்த மாறுதல்? சாதாரணமானவராக இருந்தபொழுது புலப்பட்ட உண்மை, இன்று அரசோச்சும்

நிலைக்கு வந்தவுடனே மாறுபடக் காரணம் என்ன?

இந்தப் பொக்கிஷம், தலைமுறை தலைமுறையாக நமது சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் பக்குவப்படுத்தியிருக்கிறதாம். எந்தெந்த வகையிலே நம் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் பக்குவப்படுத்தியிருக்கிறது என்று கூறவில்லை. ஒன்றுமட்டும் உண்மை—தலைமுறை தலைமுறையாக நம் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் பாழ்படுத்திவிட்டிருக்கிறது — நம் சிந்தனைகளைச் சீரழியச் செய்திருக்கிறது—சிந்தனையே செய்யவொட்டாமல் ஆக்கியிருக்கிறது.

இந்தப் பொக்கிஷத்தின் பெருமையை மேலும் விளக்குகையில், குடியானவனிலிருந்து தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்முதல், பணக்காரர் பண்டிதர்கள்வரை அனைவருக்கும் இந்தப் பொக்கிஷம் ஓர் உயிரோவியமாகத் திகழ்ந்து வந்துள்ளதாம் — இந்த அரிய உண்மையை இன்று அவர் அறிந்துகொண்டதோடுநில்லாமல், அனைவரும் அறிந்துகொள்ளும்படி உபதேசமும் புரிகிறார். குடியானவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இந்த உயிரோவியம் உதவியிருந்தால்—இன்று, அவர்கள் ஏன் உயிருடன் ஊசலாடும் நிலையினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறியாமலேயே உபதேசம் புரிகிறார். பண்டிதர்களுக்குக் கால்வயிற்றைக் கழுவ உதவியிருக்கலாம்; பணக்காரர்களுக்குத் தங்கள் கபட வாழ்க்கையை மறைக்க உதவியிருக்கலாம். ஏழையின் நிலையை எந்த வகையிலே ஈடேற்றியிருக்கிறது என்று எடுத்துக்காட்டாமலேயே உபதேசம் புரிய முனைந்துள்ளார். ஏழையின் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் அது உண்மையிலேயே பக்குவப்படுத்தியிருந்தால், அந்த ஏழை பரதவிக்கும் நிலை இன்று இல்லாதிருக்குமே!

அன்று இனப் போராட்டமாகக் காட்சியளித்தது இன்று எப்படிப் பொக்கிஷமாக மாறிற்று? யாராவது மாற்றிவிட்டார்களா? இல்லையே! சரித்திரம் பல வகையில் மாறிவந்தும், இப்பொக்கிஷம் மாறவில்லை என்கிறாரே! இவர், இராம, சீதை காவியத்தை, வால்மீகி, துளசிதாசர் எழுதியதை மட்டும் படித்திருக்கிறார் போலும்! கம்பன் எழுதியதைக் கண்டால் எவ்வளவு பெரியமாறுதல்கள் அந்தக்காவியத்திலேயே ஏற்பட்டிருக்கிறது என்பதை நன்கு அறிவாரே! வால்மீகி, கண்ணீர்வடிக்கும் நிலையிலல்லவோ கம்பன் மாபெரும் மாறுதல்களுடன் எழுதியுள்ளான்.

இந்தியாவின் பொக்கிஷமாக ராமாயணம், மகாபாரதம் உள்ளன என்று கூறும் இவர்—இந்த இரு காவியங்களையும் புரிந்துகொள்ளாதவர்கள், இந்தியாவைப் புரிந்துகொள்ளாதவர்கள் என்று கூறும் இவர்— எந்தவகையில் இவைகளைப் பொக்கிஷமெனக்கருதுகிறார்என்று நமக்குப்புரியவில்லை. இராமாயணத்தில், சீதையை இராமன் கவர்ந்து செல்வதும், இராமன் இராவணனை வென்று மீட்பதையும் பொக்கிஷமெனக் கருதுகிறாரா? அந்தக் கருத்தில் தானே, இன்றும் இங்குள்ளோரில் சிலர், கலியாணப் பத்திரிகை முதல்கருமாதிப்பத்திரிகைகள்வரை ராமஜெயம்என்று போட்டு எழுதுகிறார்கள். ராமன் வெற்றியடைந்ததைப்போல வெற்றியடையவேண்டுமென்பது தானே பொருள்! இதுதான் பொக்கிஷமா? அல்லது இராவணன் தம்பி விபீடணனைக் கையாளாகக் கொண்டு, அவனின் துணைகொண்டு வெற்றியடைந்ததைப் பொக்கிஷமெனக் கருதுகிறாரா? அப்படியெனில் அது எந்த வகையில் நேர்மையானது? மகாபாரதத்தில், ஐவருக்கும் தேவியாகி, ஆறாவதாக மற்றொருவரின் மீதும் மையல் கொண்டாள் துரௌபதை என்பதைப் பொக்கிஷம் என்கிறாரா? அல்லது, பங்காளிகளுக்குள்ளேயே பகையை மூட்டி, பாரதப் போரை கிருஷ்ணன் நடத்தி வைத்ததைப் பொக்கிஷம் என்கிறாரா? எந்தவகையிலே இவைகள் பொக்கிஷமாகக் கருதப்படுகின்றன? இந்தப்பொக்கிஷத்தினால், இங்குள்ள மக்கள் அடைந்துள்ள ஏற்றங்கள் யாவை? இம்மியளவேனும் இன்பம் அடைந்துள்ளனரா—இங்குள்ள மக்கள்? எடுத்துக்காட்டாக சான்றுகளைச் செப்புவாரா?

எள்ளளவும் எவ்வகையிலும் மக்களுக்கு ஏற்றமளிக்காத ஒன்றை, பொக்கிஷமெனப் பண்டிதரா சொல்லுவது? சீனப் பிரதமர் சோ-இன்-லாயுடன் கை குலுக்கும் பண்டிதரா இப்படிச் சொல்லுவது? இந்தியாவையும் இந்திய மக்களையும் பூரணமாக அறிந்துகொள்ள இவை இரண்டும் உதவுமானால், இந்தியாவைப்பற்றி அறிந்துகொள்ளும் அவாவினை உடையவர்களுக்கெல்லாம், இவை இரண்டினையும் பரிசாக அளிக்கலாமே! இப்படிப்பட்ட நல்லதொரு பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு, இடர்ப்படவேண்டிய அவசியம் ஏன்?

இந்தியாவிலேயே, ராமர் சீதை கதையைக் கொண்டாடும் திருவிழாவைப்போன்ற பிரபலமானது வேறு ஏதும் கிடையாதென்றும் எழுதுகிறார். ஒரு கதை, பொக்கிஷமாகவும் உயிர் நாடியகவும் கருதப்படுகிறது என்பதை மேல்நாட்டார் அறிந்தால் நகைப்பர். ஒருகதைக்கு ஒரு பெரிய திருவிழா! அதைப் போன்ற திருவிழா வேறு எதுவும் இந்தியாவில் கிடையாது!—இதைச் சொல்லுபவர் இந்தியாவின் முடிசூடா மன்னரெனப் புகழப்படும் பண்டிதர்!

தன்னுடைய புலமையைக் காட்டுவதற்காக பாடிய கதை ஒன்றை—புலவனால் சித்தரிக்கப்பட்ட கதை ஒன்றை—இந்தியாவைப் பற்றியும், இந்தியாவின் மக்களைப் பற்றியும் அறிந்துகொள்ளும் அரியதோர் பொக்கிஷமெனப் பாராட்டி பண்டிதர் புகழ்வது பரிதாபத்திற்குரிய செய்தியாகும்! ஒரு காலத்தில், ஆரிய திராவிட இனப்போராட்டக் காதையாகவும், வடநாட்டவர்கள், தென்னாட்டவர்களை விட உயர்ந்தவர்கள் என்பதை எடுத்துக்காட்ட இங்குள்ளவர்களை வானரர்கள் என்று வர்ணிக்கப்பட்டதாயும் அமைந்த காதை என்று சொல்லிய பண்டிதரே, இன்று, பொக்கிஷம் எனக் கூறுவது மேலும் பரிதாபத்துக்குரியது!! அப்படிப் பண்டிதர் கூறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானதை எண்ணும் பொழுது, நாம் உண்மையிலேயே வருந்துகிறோம்! அவரது நிலைக்கு இரங்குகிறோம்!

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெலுங்கு மொழி பேசுவோருக்கும் தமிழ் மொழியினருக்குமிடையிலே பல தகராறுகள் உருவாகியுள்ளன.

இவைகளை விளக்கும் வகையில் தான் தலைப்பிலேயுள்ள விளக்கங்களை தி. மு. க. பொதுச் செயலாளர் பொதட்டூர்ப் பேட்டையில் நடைபெற்ற தி. மு. க முதல் மாநாட்டில் வெளியிட்டார்.

*

சுற்றிலும், மலைக் குன்றுகள்! நடுவே, அந்தவூர்!!

குன்றின் உச்சியில் இருவண்ணக் கொடி பறப்பதைக் காணீர்!— என்றார், ஒரு தோழர்.

கட்டச் சென்ற போது, நான்கு பாம்புகளை அடித்தோம்!!—என்றார் இன்னொரு தோழர்.

முதல் நாள் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி துவக்கி வைக்க தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் சீர்திருத்த மாநாடு, நடைபெற்றது. தங்களைத் தெலுங்கர் என்று கருதிக் கொண்டிருப்போரும், தமிழர் என்று கூறிக்கொண்டிருப்போரும், பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்தனர் அங்கே. மாநாடு, நமக்கு மட்டுமல்ல; அவர்களுக்கும் இதுதான் முதலாவது மாநாடு! இரண்டாம் நாள் அரசியல் மாநாடு தோழர் அரங்கண்ணல் திறந்து வைக்க, அரக்கோணம் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் கிருஷ்ணசாமி சித்தூர் பிரச்னை சம்பந்தமாக, தீவிர பங்கெடுத்துக் கொண்ட தோழர். தி. மு. க. அது பற்றி அமைத்திருக்கும் குழுவில் அங்கம் வகிப்பவர். எனவே, தானும் தன்னுடைய தோழர்களும் எவ்வண்ணம் போராடினர்— இனியும் போராடுவர்— என்பதை விளக்கமாக எடுத்துரைத்தார். கழக முன்னணி வீரர்களும், சித்தூர் மாவட்ட செயல் வீரர்களும், மாநாட்டில் வந்திருந்தோருக்கு நமது கொள்கைகளை எடுத்துச் சொன்னார்கள். முதல்நாள் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் 'இன்பக் கனவு' நாடகமும், இரண்டாம் நாள் தோழர் எஸ். எஸ். ராசேந்திரன் அவர்களின் 'சந்திரமோகன்' நாடகமும் நடைபெற்றது. தோழியர் கஸ்தூரி அவர்களின் இன்னிசை விருந்தும் இருந்தது. மூன்று வழிகளிலும், நமது கொள்கையை அறியும் வாய்ப்பைப் பெற்றனர், ஆந்திர அரசில் சிக்குண்டு கிடக்கும் மக்கள். ஆந்திர அரசும், தன்னுடைய இரகசியத் தூதர்களை அனுப்பியிருந்தது.

ஆந்திர அரசின் கவனத்தையும், அவர்களது ஆட்சியில் அகப்பட்டிருக்கும் நம்மவர்களின் உள்ளத்தையும், கவரும் வகையில் அமைந்திருந்த இம்மாநாட்டின் வெற்றி, மகிழ்ச்சிக்குரியதாகும்! இதற்குக் காரணமானவர்கள் வரவேற்புக் குழுத்தலைவர் எ. டி. கே. ராமசாமி, செயலாளர் என். கே. எஸ். கணேசன், பொதுசெயலாளர் கே. பி. கேசவன், பொருளாளர் எ. டி. தெய்வசிகாமணி, தொண்டர் படைத்தலைவர் இ எம். கோதண்டபாணி, பொறுப்பாளர்கள், என். வி. சேன்சு, கே சி. ஏழுமலை முதலியோரையும், தோழர் ரஷீத், முனுசாமி போன்றவர்களையும், தமிழகம் வாழ்த்தும்.

*

எல்லைப்பிரச்னைகளை, உடனுக்குடன் முடிப்பதில், டில்லிக்கு அக்கறை கிடையாது. தமிழரும் தெலுங்கரும் மோதிக் கொள்கிறார்களா!— பார்ப்போம்; மலையாளிகளும் தமிழரும் சண்டை போட்டுக்கொள்கிறார்களா!— எதுவரையில் நடைபெறுகிறது, பார்க்கலாம்; என்றே கருதுகிறது. ஆதிக்க ஆசைபிடித்த அரசுகள், இவ்வண்ணம் பற்பல குட்டிச் சண்டைகளிருப்பதையே, தாம் கொடிபறப்பதற்கான சூழ்நிலை என்று கருதும். பண்டிதரின் டில்லி இந்தவகையில், மிகவும் பழக்கப்பட்டது! அதிலும் இப்போது, ஆந்திரத்தையாள்பவர் நேற்று வரையில் பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சியிலிருந்த பிரகாசம். கேரளத்தை ஆள்வது, பிரஜாசோஷியலிஸ்டுக் கட்சியைச் சார்ந்த பட்டம் தாணுப்பிள்ளை. இவர்களுடைய ஆட்சியில் அல்லல்கள் ஏற்படுவதையும், அதன் காரணமாக மக்கள் மன்றத்தில் அதிருப்தி ஏற்படுவதையுமே, ஆளும் காங்கிரஸ் விரும்பும்! அதனால்தான், இப்பிரச்னையைச் சீக்கிரம் ஒரு முடிவுக்குக் கொண்டுவர, பண்டித நேரு விரும்பவில்லை.

தமிழகமே, எமது அகம்!—எனும் வீர உணர்ச்சியைப் பொதட்டூர்ப் பேட்டையில் கண்டோம். இன்றில்லாவிடினும் இன்னும் சின்னாட்களில், சென்னை அரசின் கீழ் நாம் வாழ்வோம் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. அது மட்டுமன்றி, டில்லியின் தொடர்பின்றி, நாம் வாழ்வோம் என்கிற நம்பிக்கையும் அவர்கள் இதயத்தில் அரும்பியிருக்கிறது. சித்தூரின் பகுதிகளை, தமிழகத்தோடு சேர்த்து விடுவதுமட்டுமல்ல, நமது இலட்சியம். அதற்குப் பிறகும், நமக்கு வேலையிருக்கிறது! அப்படி அமைக்கப்பட்ட மொழிவழி அரசுகளைக் கொண்ட, ஒரு கூட்டாட்சிக்காகவும் நாம் போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, நமக்கு எரிச்சல் அல்ல இலட்சியம்! பிறரைப் பார்த்து வயிற்றெரிச்சல் கொண்டு வாய்வலிக்கக் கூவும் கட்சிகளுக்கு எரிச்சல் தேவை! நமக்கு அல்ல!! இந்த நன்னோக்கத்துடன், சித்தூர் மாவட்டத்தில் பணிபுரியும் நமது தோழர்களின் செயலாற்றும் திறனும், இடைவிடாத முயற்சியும் வளர வேண்டுமென்று விரும்புகிறோம். ஏனெனில், பொதட்டூர்ப் பேட்டை மாநாட்டில், பொதுச் செயலாளர் இன்னொன்றும் சொன்னார்.

"தோழர்காள்! நீங்கள், காட்டும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பொறுத்திருக்கிறது, இனி வகுக்க வேண்டிய திட்டம். பண்டிதநேரு, எல்லை விஷயத்தில், ஏதாவது செய்கிறாரா—என்று பார்ப்போம். எதுவும் நடைபெறவில்லையானால், டில்லியுடன் போராடத் தயாராக இருங்கள்! அதற்கான சூழ்நிலைகளை, இன்று முதல், ஆராயுங்கள்!! நம்முடைய போர், டில்லியிடம்!— நினைவிலிருக்கட்டும்.

★

10. தப்ப வழி கண்டுபிடித்தான்

முதல் இரண்டு வெட்டுக்கள் பொத் பொத் என்ற சப்தத்தை உண்டாக்கின. பின்னால் அதுவு மில்லை.

சில நிமிஷ நேரங்களில் அரைகஜ ஆழத்திற்குக் குழிதோண்டிவிட்டான் ஆறுமுகம். இன்னும் ஆழமாகத் தோண்டிக் கொண்டிருந்தால் நாழி யாகி விடுமோ என்ற பயம் வேறு வந்து விட்டது.

குழியை விட்டு ஏறிவந்து பிள்ளையைத் தூக்கப் போனான்.

அந்த இருட்டிலேயும் அவர் கைகளிலிருந்தமோதிரங்கள் மின்னின!

நகைகளின் மீதிருக்கும் ஆசை ஆறுமுகத்திற்கு மாத்திரமில்லையா?

சில விநாடிகள் யோசித்தான்.

பின் பரவாயில்லை என்று அதை எடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டான்!

காலையும் கையையும் சேர்த்து மடக்கினான். பிணம் மடங்குமா? காலிலிருந்த பூட்ஸ்தான் கீழே விழுந்தது!

இருந்தாலும் எப்படியோ கஷ்டப் பட்டுப் பிள்ளையை அந்தக் குழியில் மூடி, மேலே பக்கத்தில் வளர்ந்து கிடந்த சிறிய செடிகளைப் பிடுங்கிப் போட்டான்.

நன்றாகக் காலால் மிதித்து விட்டு நிமிர்ந்து பாக்கிய பவனத்தைப் பார்த்தான்.

வானத்துச்சந்திரன் அப்பொழுது தான் தன் முகத்தைக் காட்டிக் கொண்டு புறப்பட்டுக் கொண்டிருந் தது. நிசப்தமாக நின்று கொண் டிருந்தது பாக்ய பவனம்.

அப்பா! அவனை நோக்கி வந்த பேராபத்து அப்பொழுதுதான் திரும்பிப் போனதுபோலத் தோன் றியது.

உடல் பூராவும் வியர்த்து அவன் காக்கிச் சட்டை கூட நனைந்து போயிருந்தது.

எப்படியோ பெரிய ஆபத்தி லிருந்து தப்பியாகிவிட்டது. இனி உத்தமநாதபுரம் ஓட வேண்டியது தான்என்று பாக்யபவனத்தைவிட்டு ஓடினான்.

பையில் இருந்த பர்சை கெட்டி யாகப்பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந் தான், ஆறுமுகம்.

உத்தமநாதபுரத்திலே நுழையும் போது அரை உயிராகத்தான் ஆறு முகம் போய்க் கொண்டிருந்தான். அங்கே மின் விளக்குகளும் கிடை யாது. ஆகவே மேடு பள்ளங்கள் வேறு அவன் வேகத்தைக் குறைத் தன. தள்ளாடித் தள்ளாடி நடந்து பொன்னியின் குடிசையில் நுழைந் தான்.

அவளோ நீண்ட நேரத்திற்கு முன்பேதூங்கிவிட்டாள். ஆறுமுகம் காக்கிக் கோட்டைக்கூட கழற்றாமல் அப்படியே அவள் மேல் தலையை வைத்தவண்ணம் படுத்தான்—இல்லை —பொத்தென்று விழுந்தான்.

"யாரது...அண்ணே!" என்று கூச்சலிட்டுக் கொண்டு திடுக்கிட்டு எழ முயன்றாள் பொன்னி. "சும்மா படுடி!" என்று முணு முணுத்த வண்ணம் பெருமூச்சு விட்டான் ஆறு முகம்.

"ஏ, அண்ணே! இப்படிப் பெரு மூச்சு வாங்குது. ஓடியாந்தியா!" என்று கூறிக்கொண்டே அவன் தலைக்குத்துணிமூட்டையை எடுத்து வைத்தாள் பொன்னி.

"ஹிம்..." என்று அசைந்து கொடுத்துக் கொண்டே தூங்க ஆரம் பித்து விட்டான், ஆறுமுகம்.

தூக்கக்கலக்கத்திலேயேபொன்னி சில நிமிடங்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவளும் தூங்க ஆரம்பித்து விட்டாள்!

அன்றிரவு ஆறுமுகத்திற்கு தூக் கத்தைவிடக்களைப்புத்தான் அதிகம். கடைசியில் விடியற்காலை நாலுமணி சுமாருக்கு பயங்கரக்கனவுகள்வேறு மாறிமாறித் தோன்ற ஆரம்பித்து விட்டன.

"ஐயோ, வேண்டாம்! நானில்லை! ஐயோ! ஐயோ!"

ஆறுமுகம் கனவில், போலிஸ் ஸ்டேஷனில் போட்ட கூச்சல் அது. ஆனால்உண்மையிலேயே ஆறு முகம் அவ்விதம் பிதற்றினான். அதைக் கேட்டுத்திடுக்கிட்டுஎழுந்த பொன்னி "என்ன, இப்படிப்பினாத் திறே!" என்று அவன் கையை இறு கப் பிடித்துக் கொண்டாள். அவ னும் தூக்கத்திலேயே அவளை இறுக அணைத்துக் கொண்டு மறுபடியும் கனவு காணப் போய்விட்டான்.

சிறிது நேரம் விழித்தபடி இருந் தாள் பொன்னி.

"என்ன அண்ணே, இப்படித் தூங்கிறே; இன்னும் கொஞ்சநேரத் திலெல்லாம் பொழுது விடியப் போவுது!" என்று அவன் உடலைப் பிடித்துக் குலுக்கினாள்.

"உம்...!" என்று புரண்டுபடுத்த ஆறுமுகம் அடுத்த விநாடியே குதித்து எழுந்தான்.

அவன் எவ்வளவு பெரிய ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறான். இந்த நேரத்திலே இப்படித் தூங்கினால் என்ன ஆவது?

"ஐயோ! என்ன நடந்தது. ஏன் இப்படி மிரள்றே!" என்றாள் பொன்னி கண்ணைக் கசக்கிக் கொண்டே. அவள் கூறியது அவன் காதுகளில் ஏறவில்லை. அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய எண்ணமெல்லாம் மூங்கிற் புதருக்கருகில் இருந்தது.

இதோ இன்னும் சிறிதுநேரத்தில் பொழுது விடியப் போகிறது.

பாக்யபவனத்திலே பெரும் கூச்சல் ஏற்படப் போகிறது. ஆண்டாண்டு காலமாக அமைதியைத் தழுவி வாழ்ந்த அந்தப் பகுதியிலே அவலக் குரல் எழும்பப் போகிறது. அந்த நேரத்திலே அவனும் அங்கே இருக்க வேண்டும். காணாமற் போன முதலாளிக்காக அவனும் கண்ணீர் வடிக்க வேண்டும்!

அந்த விநாடியே வெளியே ஓடினான், ஆறுமுகம். பொன்னி எழுந்தாள். "ஏன், அப்படி ஓடுறே. என்ன நடந்தது...... ஏன் இப்படிப் பைத்யம்மாதிரி........" என்று கூறிக் கொண்டே பின்னால் அவளும் குடிசைக்கு வெளியில் ஓடிவந்தாள். அதற்குள் அவன் குடிசைக்கு வெகு தொலைவில் போய்விட்டான்.

வழக்கத்திற்கு விரோதமாக ஒரே யோசனையிலிருக்கும் ஆறுமுகத்தைக் கண்டு திகைத்துப் போனாள் பொன்னி. "ஏதோ, வேலை செய்த அலுப்புப் போலிருக்கு!" என்று எண்ணிக் கொண்டு மறுபடியும் குடிசைக்குள் போய்விட்டாள்.

அங்கே ஆறுமுகத்தின் குடிசை வாயிலில், அஞ்சலை இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். உள்ளே வழக்கம் போல செங்கமலமும் அலுத்துப் போய்த் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவர்களிருவரையும் தாண்டிக் குடிசையின் மற்றொரு மூலைக்குப் போய்த் தன் உடைகளைக் கழற்றினான் ஆறுமுகம். பிறகு மற்றொரு மூலையிலிருந்த தண்ணீர்ப்பானையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அவனுடைய கைகால்களில் ஒட்டிக் கொண்டிருந்த மண் இன்னும் போகவில்லை. உடலிலெல்லாம் வியர்வையோடு அழுக்குச் சேர்ந்து ஒரே கறுப்பாகக் காட்சியளித்தான் ஆறுமுகம்.

அவசரம் அவசரமா பானைத் தண்ணீரை ஊற்றி உடலைக் கழுவினான். ஏதோ ஓரளவு அழுக்குப் போக அது உதவி செய்தது. மறுபடியும் உள்ளே போய் செங்கமலத்தின் அழுக்கான புடவை ஒன்றை எடுத்து உடலை நன்றாகத் துடைத்துக் கொண்டான். பழைய படி டிரைவர் உடுப்புகளை எடுத்து மாட்டிக் கொண்டான்.

அவனுடைய பைகளைத் தொட்டுப் பார்த்தான். ஒரு மணிபர்ஸ், இரண்டு மோதிரங்கள் எல்லாம் வலப்பக்கப் பையிலே இருந்தன. நல்ல முத்து கொடுத்த புரட்சிப் பிரசுரங்கள் இடப்பக்கப் பையிலே இருந்தன.

இவைகளை அவனே எடுத்துக் கொண்டு போவதா?

சேச்சே! மாட்டிக் கொண்டால் அவனிடம் அந்த மோதிரம் எப்படி வந்தது என்று யாராவது கேட்டால்......?

"எப்படியும் இந்தப் புத்தகங்கள் இங்கேயே இருக்கட்டும்." என்று எண்ணிக்கொண்டு அந்தப்பிரசுரங்களை எடுத்து குடிசை இடுக்கில் செருகினான். அடுத்தபடியாக செங்கமலத்தின் தாவணியில் கொஞ்சம் கிழித்து அதில் பர்ஸையும், மோதிரங்களையும் வைத்து மூட்டை கட்டினான். மூட்டை கட்டும் போதே ஒரு யோசனை வந்தது, மறுபடியும் மூட்டையை அவிழ்த்து அந்த பர்ஸைத் திறந்து பார்த்தான். ஆம்! அதுவரை அந்தப் பர்ஸை திறந்தே அவன் பார்க்கவில்லையே. ஐயோ! அந்த பர்ஸில் மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரே ஒரு ஒரு ரூபாய் நோட்டும் இருந்தன. சில்லரை வைக்கும் பைகளே காணோம். ஒருவேளை பெரியமனிதர்கள் வைத்திருக்கும் பர்சிலே சில்லரைக்கே இடம் இருக்காது போலும்!

இப்படிச்சும்மாவெளியேபோகும் போதே மூந்நூற்றுச்சொச்சம் ரூபாய்களை எடுத்துப்போனால் செலவுசெய்யும்காரியமாகப்புறப்பட்டால் எவ்வளவு எடுத்துப்போவார்களோ!

கையிலே மூந்நூறு ரூபாய்கள் அகப்பட்டதும் ஆறுமுகத்திற்கு வேறு ஒரு யோசனையையும் கொண்டுவந்தது.

இந்தமூந்நூறு ரூபாயையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டால்......!

அவன் ஆயுள் பூராவும் உழைத்தால் கூட முழுசா மூந்நூறுரூபாய் எப்படிக்கிடைக்கும்? இந்தப்பணத்தோடு ஓடிவிட்டால் எங்காவதுகண் காணாத இடத்திலே, குக்கிராமத்திலே ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்ளலாம்.

பாக்யபவனத்திலே பரபரப்பு உண்டாகி அவனைத் தேடுவதற்குள் அவன் பல நூறு மைல்களுக்கு அப்பால்போய்விடலாம். தெற்கேபோவதானாலும் அல்லது வடக்கே போவதானாலும் இன்னும் அரைமணியில் ரயில் இருக்கிறது!

ஆம்! அதுதான் சரி. என்னதான் ஜாக்கிரதையாக இருந்தாலும், படித்த பெரிய மனிதர்கள் எப்படியும் அவன் மேல் பழியைப் போட்டு விடுவார்கள்.

இந்த யோசனை சில நிமிட நேரங்கள் ஆறுமுகத்தின் மூளையையே குழப்பி விட்டது.

இதற்குள் வெளியே படுத்திருந்த அஞ்சலைஎழுந்துவிட்டாள். உடனே அந்தபர்சிலிருந்த ஒரு ரூபாயை மாத்திரம்எடுத்துக்கொண்டுமீதியை அவசரம் அவசரமாக மூட்டை கட்டினான்.

"என்னடா, இராத்திரி பூராவுமா பங்களாவிலே வேலையிருந்தது. ஏதாவது வயித்துக்கு போட்டியா.........!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் அவன் தாய்.

ஆறுமுகம் இன்னும்தன்உலகத்திலேயே இருந்தான். பேசாமல் மூட்டையைக் கட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

"ஏண்டா, நான் கேட்கிறேனே, பதில் சொன்னா என்ன கேடு? மானேஜர், வேலை கொடுத்தாராடா?"

ஆறுமுகம் விழித்தபடியேவாயிற்படியைத் தாண்டினான்.

"எல்லாம்கொடுத்தாரு. இப்போ நாழியாயிடுத்து' சாயங்காலமாவந்து சொல்றேன்!" என்று கூறிக் கொண்டே நடந்தான் ஆறுமுகம்.

அஞ்சலைக்கு அவன் மேலுள்ள ஆசை அளவுக்கதிகம்.

"ஏண்டா, இந்தக் கஞ்சியாவது குடிச்சிட்டுப் போயேன்!" என்று கூறிக் கொண்டே அவளும் வெளியே வந்தாள். அதற்குள் ஆறுமுகம் பல குடிசைகளைத் தாண்டிப் போய் விட்டான்.

சில விநாடிகளில் பொன்னியின் குடிசைக்கு முன் ஆறுமுகம் மறுபடியும் நின்றான்.

"பொன்னி, பொன்னி!!"

"என்னடிகழுதே! ஏய்பொன்னி!'

"ஐயோ, சனியனே! இதோ வந்துட்டேனே. அதுக்குள்ளே உயிர் போற மாதிரி கத்தினியே, ஏன்?"

என்றுகூறிக்கொண்டேவெளியே வந்தாள்.

"இந்தாடிஇந்தப்பொட்டலத்தை அப்படியே அடுக்கு பானைக்குள்ளே போட்டுவை. சாயங்கலமா வந்து பேசிக்கலாம்!".

"இதுஎன்னுங்கிறேன்,இவ்வளவு பத்திரமா முடிச்சுப் போட்டுக்கட்டி வைச்சிருக்கிறே!"

"ஏண்டி, இதெல்லாம்கேட்காதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன். கொண்டுபோய்வையடி! அப்புறமா பேசிக்கலாம்," என்றான் ஆறுமுகம்.

அவனுடைய அதிகாரக் குரலில் பயந்து போன பொன்னி அடுத்த பேச்சுப் பேசாமல், உள்ளே போய் அடுக்குப் பானையின் அடியிலே அதை வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

அதற்குள் ஆறுமுகம் சேரியின் கோடிக்கே போய்விட்டான்.

பொன்னியின் வீட்டைவிட்டு மெயின் ரோடுக்குவந்து சேர்ந்தான் ஆறுமுகம்.

நேற்று இதே இடத்திலே வந்து நின்றபோது ஆறுமுகத்தின் மனதிலே எவ்வளவு உற்சாகம், ஆச்சரியம், நம்பிக்கை எல்லாம்இருந்தது.

நேற்றுக் காலையில் அவன் வாழ்க்கையிலேயே சூரியன் உதயமாயிற்று நீராடி, நெஞ்சில்களங்கமின்றிப் புது உணர்ச்சியோடு நாமும் மனிதனாக வாழப் போகிறோம்என்ற முழு நம்பிக்கையோடு அந்த இடத்திலே வந்து நின்றான்.

ஆனால் இன்று......!

எல்லாம் தலைகீழாகியது. மனக் கோட்டைகள், வாழ்க்கை அபிலாஷைகள் எல்லாம் தூள் தூளாகியது.

இனி இந்த உலகத்திலிருந்து தப்பித்தால் போதும் என்ற அளவிலே ஆறுமுகம் ஒரு நாளில் மாற வேண்டியாகிவிட்டது.

அவனுடைய வாழ்க்கையில் கதிரவன் தோன்றவில்லை. கருமேகங்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. துன்பத்தை சாறாகப் பிழிந்து நீராக அவன் தலையிலே கொட்ட அப்படியே மலைத்துப்போய் நின்றான் ஆறுமுகம். அவனையும் அறியாமல் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஆஹா! ஒரே நாளில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. எத்தனை விதமான அனுபவம் கிடைத்தது. இதுவரை கண்டிராத காட்சிகள்! கேட்டிராதகோலாகாலங்கள்! எல்லாம் அவன் கண்முன்னேலேயே அவனைச்சுற்றியே நடந்தன. அவனுடைய இருபத்தைந்து வருட வாழ்க்கையிலேயே அவன் நினைத்துக்கூடப் பார்க்காத நிலைக்கு அவன் உயர்த்தப்பட்டான். ஆனால் அந்த அற்புத வாழ்வு சூறாவளியின் இடையிலே இன்று சிக்கிக் கொண்டிருக்கிறது. அவன்சிறைக்குப்போவதோ, போலிஸிடம் அடிபடுவதோகூடப் பெரிதல்ல. வாழ்க்கையின்பத்தை, அதனை மறைந்திருந்த திரையை நீக்கி அவனுக்கு காட்டினார்கள். அதை அவன் பார்த்து ரசிப்பதற்குள்ளேயே அந்தத் திரை மூடப்பட்டது மாத்திரமல்ல, அதை பார்த்து ரசிக்க கற்றுக் கொண்ட அவனுக்குக் கண்ணே பிடுங்கப்படும் நிலைக்கு கொண்டுவரப்பட்டு விட்டான்.

இல்லை, இனிமேல் அவன் ஏமாற மாட்டான். எப்படியும் தப்பித்துக் கொண்டு இன்பலோகத்தை எட்டிப் பிடித்துவிடுவான்.

இப்படிப்பட்ட உணர்ச்சிகள் ஆறுமுகத்தின் அறியா மனதிலே மாறி மாறி வந்தது கொண்டிருந்தன.

அன்று நாயர் கடை டீ கூட ஆறுமுகத்திற்குப் பிடிக்கவில்லை. ஒரே வெந்நீராக இருந்தது. பாக்ய பவனத்திலே குடிக்கும், நீர்கூட இதைவிட ருசியாக மணத்தோடு இருந்தது!

வழக்கப்படி இட்லி குருமா டீ சாப்பிட்டு, ஒரு கட்டுப் பீடிவாங்கிக் கொண்டு பாக்ய பவனம் நோக்கிப் புறப்பட்டான் ஆறுமுகம்.

சரியாக ஆறு மணிக்கு பாக்ய பவனத்திற்குள் நுழைந்தான் ஆறுமுகம். போகும் போதே மூங்கிற் புதரைக் கவனித்தான்.

பல பூச்செடிகளைத் தாண்டி காம்பவுண்டுக் கோடியில் காடாக இருந்தது அந்த மூங்கிற் புதர். அவனைத் தவிர வேறு யாரும் அந்த இடத்திற்குச் செல்லவேமாட்டார்கள் என்பது அவனுக்குநிச்சயமாகத் தெரிந்தது. முழுத் தைரியத்தோடே பங்களாவிற்கு வந்தான். கீழே யாருமே இல்லை. இப்படி ஒருவருமே இல்லாத நேரத்திலே அங்கு வருவதை ஆறுமுகம்விரும்பவில்லை. தான் இப்பொழுது தான் வருகிறோம்என்பதையாராவதுதெரிந்து கொண்டால்தான் நல்லது என்று அவனுக்குப் பட்டது.

ஆகவே முதலில் பின் பக்கம் போனான். அப்பொழுதுதான் குப்பனும் எழுந்து வந்து கொண்டிருந்தான்.

"என்னப்பா, ஆறுமுகம்! ஏது இவ்வளவு விடியற் காலையிலேயே வந்து விட்டாய்?" என்றான் அவனை அவ்வளவு காலையிலே பார்த்து ஆச்சரியமடைந்த குப்பன்.

"ஹிம்......ஐயா காலையிலேயே ஸ்டேஷனுக்குப் போகணுமென்னுங்கா..." என்று இழுத்தான் ஆறுமுகம். இவ்வளவு சீக்கிரம் தான் வந்தது சரியில்லையோ என்ற பயம் வேறு ஆறுமுகத்திற்கு.

"ஸ்டேஷனுக்கா......" என்று சொல்லிக் கொண்டே போனான் குப்பன்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.